விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 19 வியாழக்கிழமை (02.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## வடக்கு மேதின நிகழ்வுகள்...


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
வடமராட்சி



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
கிளிநொச்சி


புதிய ஜனநாயக மாக்சிச -
லெனினிசக்கட்சி, யாழ்ப்பாணம்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி

# 'இலங்கை மீது அமெரிக்கா அழுத்தங்களை தொடரும்'

### ஊடக சந்திப்பில் பற்றிக் உரை



(வாஷிங்டன்)

இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீது அமெரிக்கா நேரடியான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதி பேச்சாளர் பற்றிக் வென்ரெல் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## உளறல் சந்திரிகாவும் அழுகிப்போன சரத்தும்

### விமர்சிக்கிறார் ரோஹித



(கொழும்பு)

ஜனாதிபதி வீதிகளைப் புனரமைத்து, விமான நிலையங்கள், துறைமுகம்களை நிர்மாணித்து வருகிறார். அன்று செய்ய முடியாததை தற்போது சந்திரிகாவிற்கு பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சந்திரிகா நித்திரையிலிருந்து எழுந்தவர் போல் உளறல் சத்தம் போடுகிறார். பொன்சேகாவோ சந்தையில் விற்பனை செய்ய முடியாத பொருளாக மாறி (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாயம் தோல்வி கண்டுள்ளது

### கனேடிய அமைச்சர் சாடல்

(கொழும்பு)

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை இவ்வாண்டு இலங்கையில் நடத்த அனுமதித்ததன் மூலம் மிகப்பெரிய சோதனை ஒன்றில் பொதுநலவாய அமைப்பு தோல்வி கண்டுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் மனித வுரிமை நிலைமை தொடர்பிலும் அரசாங்கத்தின் அதிகாரப் போக்குக் குறித்தும் கனடா மிகுந்த கவலை கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கனேடிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவின் முன்பாக நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் பொதுநலவாய அமைப்பிலுள்ள மோசமான நிலைமையை கனடா மட்டுமே வெளிப்படுத்தி வருவதாகவும் இது ஒரு சோதனை என்றே தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் (20ஆம் பக்கம் பார்க்க)

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும்!

### டேவிட் கமருனுக்கு மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் அழுத்தம்!

(லண்டன்)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமருனுக்கு அதிகளவு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக இன்டிபென்டன்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டுக்கான பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாடு திட்டமிட்டபடி இலங்கையில் நடைபெறும் என பொதுநலவாய செயலகம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தது. பொதுநலவாய செயலகத்தின் இவ்வறிவிப்புத் தொடர்பில் கனடா அதிர்ச்சி வெளியிட்டிருந்தது.

அத்துடன் இலங்கையில் மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோர் மீது (19ஆம் பக்கம் பார்க்க)

### போர் வெற்றி கொண்டாட்டங்களுக்கு தயாராகிறது அரசு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து, அரச படைகள் போரில் ஈட்டிய வெற்றியை நினைவு கொள்ளும் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களுக்கு இலங்கை அரசு தயாராகி வருகிறது.

இலங்கை படையினரால் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதியன்று (19ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் கோட்டத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் அதிபர்களை கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந)

## சி.ஐ.டி.வணக்கம் !

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் இணைந்து கரவெட்டி ஞான வைரவர் ஆலய முன்றலில் மேதினத்தை நேற்று நடத்தியிருந்தது. இதன் போது உரையாற்றிய சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு (சி.ஐ.டி) வணக்கம் தெரிவித்ததால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதோடு கைதட்டி ஆரவாரப் பட்டுக் கொண்டனர்.

மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் உள்ளிட்ட விருந்தினர்கள்மற்றும்பொதுமக்கள் ஊடகவியலாளர்களுக்கு வணக்கம் தெரிவித்த பின்பு இங்கு பிரசன்னமாகியிருக்கும் புலனாய்வுப் பிரிவினருக்கும் எனது வணக்கங்கள் எனத் தெரிவித்திருந்தார். (செ-6)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்
A/C


சிவகார்த்திகேயன், தனுஷ், நயன்தாரா மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30



வருகிறது
G.S.Exam
வந்துவிட்டது

**வலையின் தொகுப்பு**

அத்துடன்
வலையின் விசேட வெளியீடு – 2

மற்றும் 13,14,15,16 வலையின் மாதாந்த இழைகளையும் இன்று முதல் யாழ். நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தொடர்புகளுக்கு:-
சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்
077 6913337 (2510)


# ஈ.பி.டி.பியினரின் மே தின எழுச்சி நிகழ்வு

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினரால் நடத்தப்பட்ட கிளிநொச்சி மேதின எழுச்சி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமான நிகழ்வில், பூநகரி, அக்கராயன், முழங்காவில்,கண்டாவளை, பளை போன்ற பிரதேசங்களில் இருந்து வருகைதந்திருந்தவர்கள் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கூடிய நிற்க ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 2013 ஆண்டு மே தின நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு தொழிற்சங்கங்களான பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், கடற்தொழிலாளர் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், உழவு இயந்திர சங்கம், வர்த்தக சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், கட்சியின் பிரதேச கிராம மட்ட செயற்பாட்டாளர்கள் என பல தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தலைமையில் நடைபெற்ற மேதின நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ,கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றினர். (செ-11)

# இன அழிப்பை தடுத்து நிறுத்த தேச அங்கீகாரம் அவசியம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

எமது தேசத்திற்கான அங்கீகாரம்பெறப்படுதனூடாகவே இன அழிப்பை தடுத்து நிறுத்த முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் த்லைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரசும் இணைந்து கரவெட்டி ஞான வைரவர் ஆலய முன்றலில் மேதின கூட்டத்தை நடத்தியிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது கட்சிப் போராட்டங்களை நடத்துவதற்கான அறிவித்தல்களை விட்டவுடன் அதற்குப் போட்டியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்தல்களை விடுகின்றது.

எந்தவித இலக்கும் இல்லாமல் போராட்டங்களை முன்னெடுப்பதனால் எந்த விதபயனுமில்லை.தமக்கு மக்கள் பலம் இருக்கின்றது என்பதை நிரூபிக்கவே போராட்டங்களை நடத்துகின்றனர் கூட்டமைப்பினர்.

வலி. வடக்கில் இராணுவத்தினர் காணி சுவீகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதை எதிர்த்து எமது கட்சி ஆர்ப்பாட்டம் நடத்த முன் வந்த போது உடனடியாக அதற்குப் போட்டியாக தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக கூட்டமைப்பு அறிவித்தது. ஆனால் தொடர்போராட்டம் ஆரம்பித்த அன்று மதியம் 12 மணியுடன் முடிபிற்கு கொண்டு வரப்பட்டு விட்டது.

எனவே எந்த வித இலக்கும் இல்லாமல் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனால் பயனெதுவும்இல்லை. அத்தோடு வடக்கு கிழக்கில் இடம் பெறும் அடக்குமுறைகள் காணி சுவீகரிப்பு என்பவற்றைக் தடுத்து நிறுத்த எமது தேசம் அங்கீகாரம் பெற வேண்டும். அதனூடாகவே இன அழிப்பை தடுத்து நிறு த்த முடியும்.

தேச அங்கீகாரத்திற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என அங்கு மேலும் அவர் தெரிவித்தார். (செ-6)

# கொழும்பில் மேதின பேரணி

ஆளுங்கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளும் எதிரணிக் கட்சிகளும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களிலும் மேதின பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் அவரது கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி, சோசலிஸ முன்னிலைக் கட்சி உள்ளிட்ட கட்சிகளும் தமது பெருந்திரளான ஆதரவாளர்களுடன் கொழும்பில் மேதினக் கூட்டங்களை நடத்தியுள்ளன.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டமும் கொழும்பில் நடந்தது.

இலங்கையில் ஒட்டுமொத்த சமூகமும் தொழிலாளர் சமூகமாக வாழும் மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்திலேயே பிரதான தமிழ்த் தொழிற்சங்கங்கள் தமது மேதினக் கூட்டங்களை நடத்தியிருந்தன.

நுவரெலியாவில் நடந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதியின் சகோதரார் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

தலவாக்கலையில் நடந்த மலையக மக்கள் முன்னணி மற்றும் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய கட்சிகளின் கூட்டங்களில் ஜனாதிபதியின் மகன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார். (செ-11)

## மேதின சுவரொட்டிகள் மீது கழிவொயில் வீச்சு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதின கூட்டத்தின் சுவரொட்டிகள் மீது இனந்தெரியாத நபர்கள் கழிவு ஓயில் வீசி அசிங்கப்படுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இணைந்து நடத்திய மேதினக் கூட்டம் நேற்று புதன் கிழமை பி.ப 3 மணிக்கு கரவெட்டி சாமியன் அரசடி ஞானவைரவர் ஆலயமுன்றலில் இடம் பெற்றது .

இதற்கான சுவரொட்டிகள் வடமராட்சி பிரதேசங்களில் ஆங்காங்கே ஓட்டப்பட்டிருந்தது. இதனைப் பொறுத்துக் கொள்ளாத இனந்தெரியாத நபர்கள் சில இடங்களில் கழிவு ஓயில்களை வீசியும் சில இடங்களில் உள்ள சுவரொட்டிகளை கிழித்தும் அட்டகாசம் புரிந்ததை அவதானிக்க முடிந்தது. (செ-3-24)


**மக்கள் வங்கி அறிவித்தல்**

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 15.06.2013, 16.06.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையங்கள் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3165)


# "உரிமைக் குரலாய் மேதினம்"

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

எமது உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நாளாக இந்த மே நாள் அமைந்துள்ளது.இன்று சர்வதேச தினமானது ஒடுக்கப்படும் தொழிலாளர்கள் வர்க்கத்தினருடைய உரிமைகளை வென்றெடுக்கும் நாளாக இத் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்கள் தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்ற நாளாக இன்றைய நாள் இருக்கின்றது.

இன்று தமிழர் தாயகப் பகுதிகளிலே தமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக நிலப்பறிப்புக்கள் இடம் பெற்று வருகின்றது.

இன்று மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் உரிமைகூட மறுக்கப்பட்டிருக்கின்றது.உலக வரலாற்றில் தமது உரிமைக்காகப் போராடாமல் உரிமைகளைப் பெற்றதாக வரலாறுகள் இல்லை .

அந்த வழியிலேயே எமது உரிமைகளையும் போராடித்தான் பெற வேண்டும் என தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை .சேனாதிரா சா தனது உரையில் குறிப்பிட்டார்.

### மயங்கிய மாவை

இந்நிலையில் உரையாற்றிக் கொண்டிருந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மயக்கமடைந்தார்.

மேடையில் மயங்கிய அவரை அவரது பாதுகாவலர்கள் பாதுகாப்பான முறையில் ஓரிடத்தில் தங்கவைத்து அவருக்கான முதலுதவியினை வழங்கினர்.

அரை மணித்தியாலங்களுக்கு மேலாக வெயிலில் நின்று உரையாற்றிய போது தனக்கு லேசாக மயக்கம் ஏற்பட்டதாகவும் சற்றுநேர ஓய்வின் பின் அது சரியானதாகவும் மாவை எம்.பி தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராலும் கரைச்சிப்பிரதேச சபையினராலும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட மேதின நிகழ்வு நேற்று காலை 9.00 மணிக்கு கரைச்சிப்பிரதேச சபை உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சி.சிறீதரன் ,யோகேஸ்வரன், அரியநேந்திரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன்சிறில், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் நல்லையா குருபரன், மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் இளைஞர் அணித் தலைவர்கள் ,மாந்தை கிழக்கு ,சுன்னாகம் ,மட்டக்களப்பு பாண்டியன்குளம் ,முல்லைத்தீவு, வலி.தென்மேற்கு, கரைச்சி உள்ளிட்ட பிரதேசங்களின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள் ,உறுப்பினர்கள் ,மக்கள் என ஐந்நூறுக்கு மேற்கொண்டோர் கலந்து கொண்டு உலகத் தொழிலாளர் தினத்தை சிறப்பித்தனர். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## களிப்பு- மகிழ்ச்சி- ஆனந்தம்

"எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது சேர்" என்று கூறிக் கொண்டு என்னிடம் ஒருவர் வந்தார். என்னிடம் சிறிது நேரம் பேசி விட்டு அதன்பின் அப்படி கூறியிருந்தால், அதிலே அர்த்தம் இருந்திருக்கும்.

என்னிடம் வருவதற்கு முன்னரே வாழ்க்கை வெறுத்து விட்டது என்று கூறி விட்டாரே.

"என்ன சேர் விடயம்?" என்று விசாரித்தேன்.

"எங்கள் வீட்டிலே தினமும் மூன்று வேளையும் ஒரே மாதிரி சாப்பாடு. வித்தியாசமே இல்லை... இப்படியாக மூன்று மாதங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அதைவிட பட்டினி கிடந்து இறந்து விடலாம் என்று நினைக்கிறேன்" என்றார்.

ஒரு பெரியவர் (ஏஜினீஷ்) கூறிய தத்துவத்தைக் கூற நபர் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது ஒருவர் கிடைத்து விட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளிலே மூன்று விதம் உள்ளது. அதாவது களிப்பு, மகிழ்வு,ஆனந்தம்.

"களிப்பு" என்பது உடம்பைப் பொறுத்தது.

"மகிழ்வு" என்பது மனதைப் பொறுத்தது.

"ஆனந்தம்" என்பது ஆன்மாவைப் பொறுத்தது.

இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புக்களின் தன்மையும் வேறு வேறாக உள்ளது.

முதலிலே "களிப்பு" எடுத்துக் கொண்டால், நமது புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உள்ளது.

விரைவிலே சலிப்பை ஏற்படுத்தும் உணவு, உடை இவையெல்லாம் களிப்பை தரக்கூடிய பொருட்களாகும். புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய இது மாதிரி பொருட்கள் எல்லாம் முதல் தடவை நமக்குக் கொடுக்கும் களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியிலே வெறுப்பாகவே மாறி விடும்.

நாம் உணவு சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதில் இட்லியை எடுத்துக் கொண்டால், ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்லி சாப்பிடும் போது தருமா?

முதல் தடவையாக புதிய சட்டை அணியும் சந்தோசம், அச் சட்டையை நாம் பத்தாவது தடவையாக அணியும் போது வருமா... இதுதான் "களிப்பு"- அதாவது விரைவாகச் சலிப்பை தரக்கூடியது.

ஆனால், "மகிழ்வு" என்பது அப்படியல்ல... ஒருவர் அனுபவிப்பதால் இன்னொருவருக்கு குறைந்து போகாது.

காலையிலே சூரிய உதயத்தை பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள்- அதையே இன்னொருவர் பார்த்து சந்தோஷப்பட்டால் குறைவு ஏற்படாது.

மூன்றாவது சுகம் தரக்கூடியது "ஆனந்தம்"

அது எப்படி?...

இது நம்மில் இருந்து சுரக்கிறது. மனம் சலனங்களில் இருந்து விடுபடும்போது, இந்த ஆனந்தம் பிறக்கிறது. இது நிலையான சுகம். களிப்பிலிருந்தும் மகிழ்வுக்கும் மகிழ்விலே இருந்து ஆனந்தத்திற்கும் செல்வது தான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# உழைக்கும் சமூகத்தின் வியர்வை ஒரு போதும் வீண் போகக் கூடாது

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

தொழிலாளர்களின் உழைப்பு வீண் போகக்கூடாது என்பதில் உறுதியான கொள்கையுடன் செயற் படும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் உழைக்கும் வர்க்கம் மேன்மையடையும் என்பதில் ஐயமில்லை என பிரதமர் தி.மு ஜயரட்ன விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேதினச் செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

நிலப்பிரபுத்துவ முறைமை வீழ்ச்சி கண்டதும் முதலாளித்துவ பொருளாதார முறை ஐரோப்பாவில் பரவியதைத் தொடர்ந்து தொழிலாளி என்ற தனிநபர் பிரிவு தோற்றம் பெற்றது.

பொருளாதார ரீதியாக பிளவுபட்ட சமூகம் ஒன்றில் வாழும் வகுப்பினரிடையே ஏற்படும் அழுத்தம் காரணமாக தொழிலாளர் போராட்டம் உருவாகின்றது.

சர்வதேச தொழிலாளர் தினத்துடன் இணையான வகையில் 1934 ஆம் ஆண்டில் சிவப்பு நிற ஆடைகளை அணிந்து ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் காலி முகத் திடலிலிருந்து விக்டோரியா பூங்காவிற்கு வருகை தந்த நிகழ்வானது உள்நாட்டுதொழிலாளர்களின்வேண்டுகோள்கள் சம்பந்தமான அதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான ஒரு நடவடிக்கையாக அமைந்தது.

தற்போது அச்சம், சந்தேகம் அற்று வாழ்வதற்குப் பொருத்தமான சூழல் ஏற்பட்டிருப்பதனைப் போன்றே துறைமுகம் மின்னுற்பத்தி நிலையங்கள், பெருந்தெருக்கள், விமான நிலையம், பாலங்கள், நீர்த்தேக்கங்கள் போன்ற பாரிய பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து அத் திட்டங்களின் பயனை அனுபவிக்கும் தருணத்தில்நாம் இருக்கின்றோம்.

இத்தருணத்தில் தொழிலாளர்களின் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எப்போதும் தொழிலாளர் வர்க்கத்தினரையே சார்ந்து செயற்படுகின்றார் எனக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இன, மத, கட்சிபேதமின்றி சகல தொழிலாளர்களையும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும்.

தொழிலாளர் வர்க்கத்தினரின் வியர்வை வாசத்தை அறிந்து அவர் களுடன் ஒன்றாக இணைந்து உரிமைகளுக்காக போராடியவராக ஜனாதிபதியைக் குறிப்பிடலாம்.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தொழிலாளிகளைப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது நியாயமற்ற செயலாகும்.

தேசிய அபிவிருத்தியில் எம் முன்னே காணப்படும் சவால்களைவெற்றிகொண்டு இந்நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமையை பாதுகாத்து அபிவிருத்தியை நோக்கி இந்நாட்டை வழி நடத்திச் செல்லும் பொறுப்பும் கடமையும் தொழிலாளர் வர்க்கத்தினர் உட்பட எம் அனைவர்மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

ஆசியாவின் புது மையாக இலங்கையை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர் வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு அத்தியா வசியமான தென இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறப்பாக அமைய வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன் எனவும் அத்தோடு தொழிலாளர் தின நிகழ்வுகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-130 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 80 |
| தக்காளி | 70 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 120 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-120 | 120-180 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- |
| பயற்றங்காய் | 50 | 110 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100 | 50 | 120 |
| முருங்கைக்காய் | 700 | 700 | 500 |
| போஞ்சி | 80 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 |

# இராசி பலன்

02.05.2013
(சித்திரை 19, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சப்தமி முற்பகல் 10.22 மணிவரை
அட்டமி முற்பகல் 10.23 மணிவரை
உத்தராடம் காலை 7.05 மணிவரை
திருவோணம் பின்னிரவு 5.50 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
சுபநேரம் 7.27-8.57மணிவரை
நடேசரபிசேகம்

**மேடம்** தொலைபேசிமூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**இடபம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழி உறவினர்களின் வருகையுண்டு, செலவுகளுக்கேற்ப பணம் வந்து சேரலாம், சுபகாரியங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், நட்பு பகையாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, தொழில் முயற்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், பயணத்தை தள்ளி வைக்க நினைப்பீர்கள்.

**கடகம்** நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர், புதிய பொருட்சேர்க்கையுண்டு,முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்** நன்மைகள் நாடிவரும் நாள், அயல் நாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், மறைமுகப் போட்டிகள் மாறும், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கன்னி** இனிமையான நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சொத்துக்களால் நன்மையுண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பணவரவு திருப்தி தரும்.

**துலாம்** யோகமான நாள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், தாய்வழி அனுகூலமுண்டு, மாற்றினத்தவரின் மத்தியில் மகிழ்ச்சி க்குரிய செய்திகள் வந்து சேரலாம், கல்வியில் மேன்மையுண்டு

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை, சாதித்துக்கொள்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறுவற்கான வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்** கனிவாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** சுபசெலவுகள் கூடும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைவாகத் காணப்படும், கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை. வெளியில் வெளிநாட்டுப் பறவைகள்

(கரவெட்டி)

வடமராட்சி வல்லைவெளி நீரேரிகளில் வெளிநாட்டு பறவைகள் அதிகமாக உலாவுவதை அவதானிக்க முடிகிறது.

தென் ஆசியா மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளின் காலநிலை மாற்றத்தால் இப்பறவைகள் இடம்பெயர்ந்து வடமராட்சி பிரதேசத்திற்கு வந்துள்ளதாக அறிய முடிகிறது.

வெள்ளை நிறத்திலும் உயரமாகவும் தோற்றமளிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து வல்லைவெளி நீரேரிகளில் நீராடுவதையும் உணவைத் தேடி உட்கொள்வதையும் மக்கள் வேடிக்கையாக பார்த்து மகிழ்கின்றனர்.

வெளிநாட்டு பறவைகளை வேட்டையாடும் நபர்களுக்கு கடந்த காலங்களில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)



## குக்கர் வெடித்ததில் பெண்ணொருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சமையல் செய்வதற்காக குக்கரை பற்ற வைத்தபோது குக்கர் வெடித்ததில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவுவேளை வட்டுக்கோட்டையில் இடம் பெற்றுள்ளது.

இதில் வட்டுக்கோட்டை சித்தன்கேணியினைச் சேர்ந்த மோகனதாஸ் நிரஞ்சினி (வயது 34) என்ற பெண்மணியே காயமடைந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சமைப்பதற்காக நேற்று முன்தினம் இரவு குறித்த பெண்மணி மண்ணெண்ணெய் குக்கரை பற்ற வைத்துள்ள போதே இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-4)

## புங்குடுதீவு சிவன் ஆலய தேர்த்திருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கோவில் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியவில் நடைபெறும்.

இன்று மாலை வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.(ந)

# பிரதேச ரீதியான விளையாட்டுக்கள் சிறந்த வீரர்களை உருவாக்க வேண்டும்

### வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(கரவெட்டி)

கிராம மட்டத்தில் சிறந்து விளங்கும் வீரர்களை மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஊடாக தேசிய மட்டத்தில் சாதனை படைக்க வைப்பதே பிரதேச விளையாட்டு விழாவின் நோக்கமாகும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு மிகவும் பிரமாண்டமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு சிறந்த தடகள உதைபந்தாட்ட போட்டிகளையும் கண்டு களித்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச விளையாட்டு விழாக்கள் கிராம மட்டத்தில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களை மாவட்டம், மாகாணம் ஊடாக தேசிய மட்டத்தில் சாதனை படைக்க வைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டவை.

கிராம மட்டங்களில் இலை மறை காயாக உள்ள விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களை விளையாட்டு துறையில் வளர்த்தெடுப்பதே விளையாட்டு கழகங்களின் முக்கிய நோக்கமாகும்.

எனவே, பிரதேச விளையாட்டு நிகழ்வுகள் ஊடாக தமது கிராமங்களில் உள்ள விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களை இவ்வாறான விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்ற வைத்து எதிர்காலத்தில் சிறந்த தேசிய வீரர்களை உருவாக்க விளையாட்டு கழகங்கள் முன்வர வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-24)

## மரதன் ஓட்டம்

(நல்லூர்)

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ். மாவட்ட ரீதியில் இளைஞர், பெண்கள், முதியோர் ஆகியோருக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக்கிளையின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 0212222561 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-134)

## தெற்ப உற்சவம்

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய தெற்ப உற்சவப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை விசேட வழிபாடுகளுடன் ஆரம்பமாகி மாலை ஆலய வளாகத்தில் உள்ள தீர்த்தக் கேணியில் சுவாமி தெற்பத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-3-19)





# குறிகட்டுவானை நோக்கி வடதாரகை கப்பல் சேவை

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களுக்கு இடையோன வட தாரகை கப்பல் சேவை மீண்டும் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாக விகாரையின் பௌத்த பீடாதிபமியின் பிரித்தோதும் வைபவத்துடன் வட மாகாண கடற் படைகளின் கட்டளைத் தளபதி ரியல அட்மிரர் டி.எஸ்.உடவத்த மற்றும் யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரினால் குறித்த கப்பல் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்றைய தினம் குறிகட்டுவான் துறைமுகத்திலிருந்து 75 பயணிகளுடன் வடதாரனை கப்பல் சேவையின் பயணம் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடந்த புத்தாண்டு விழாவில் சமூக சேவையாற்றிய 11 பேருக்கு சமூகதிலகம் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளையின் வங்கி அதிகாரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் மண்டைதீவு முன்னாள் கிராம சபைத் தலைவர் அமரர் க.கைலாசப்பிள்ளையின் மகனுமாகிய கை.விக்னேஸ்வரனுக்கு சமூக திலகம் எனும் பட்டத்தை பேராசிரியர் எம்.சின்னத்தம்பி வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் காரை மணிகண்டன் சுந்தரலிங்கம் மாலை அணிவிப்பதையும் படத்தில் காணலாம்.

## மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை

(தும்பளை)

கற்கோவளம் பகுதியில் கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதி மற்றும் அக்கிராமத்தின் மையப் பகுதி ஆகியவற்றுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வீதியில் நீண்ட காலமாக மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு வேளைகளில் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதோடு விபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

மேலும் மழை காலங்களில் அதிகமான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே இத்துறை சார்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தை கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மின் விளக்குகளைப் பொருத்தி போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப் பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-19)

# வடிகால் அமைப்பதற்கு 10 கடைகள் இடிக்கப்படும்

(கரணவாய்)

கரவெட்டி தெற்கு, மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பழைய சந்தைப் பகுதியில் அமைந்துள்ள 10 கடைகள் உடைக்கப்பட்டு வடிகால் அமைக்கப்படவுள்ளது.

மீளவும் கடைகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பழைய சந்தைப் பகுதியில் 10 கடைகள் உடைக்கப்பட்டு நகர வடிகால் அமைக்கப்பட்டு மீளவும் கடைகள் கட்டித் தரப்படும் என இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு 10 கடை உரிமையாளர்களும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

கடைகள் உடைத்து கட்டப்பட்டதும் உரிமையாளர்களிடம் கடைகள் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சபைத் தவிசாளர் பிரதேச சபை செயலாளர் கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(அ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கத்திறன் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(பூந்தோட்டம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் , அரச நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் இப் போட்டிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

சிறுகதை, பாடல், சிறுவர் கதை, குறுநாடகம், ஓவியம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளதால் இப் போட்டி தொடர்பான விபரங்கள் வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து அரச திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிக்கான விண்ணப்பங்களையும் ஆக்கங்களையும் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் செயலகங்களில் கலாசார உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் கோரியுள்ளார். (அ-2-266)

# சங்கானை பி.செ.அணிக்கு வெற்றி







(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மகளிருக்கான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை 5 விக்கெட்டுகளால் தோற்கடித்து சங்கானை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான மகளிருக்கான கிரிக்கெட் போட்டி கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஐந்து ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தர்சிகா 11, தர்சினி 8 ஓட்டங்களைப் பெற்றனர். சங்கானை பிரதேச செயலக அணியின் பந்துவீச்சின் சார்பில் ராஜிதா 2, ஜெயரஞ்சினி, டிலானி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 4.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதில் பிரவீணா 2( ), ஜெயரஞ்சினி 12 ஓட்டங்களைப் பெற்றனர். அரையிறுதி ஆட்டங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியை சங்கானைப் பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. (அ-3-24)

# விகாரமடைந்த அரசியல் கலாசாரமே நாட்டில் உண்டு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

விகாரமடைந்த அரசியல் கலாசாரமே நாட்டில் காணப்படுவதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதி நிதிகளாக நியமிக்கப்பட்ட அரசியல் வாதிகள் கள்ளச் சாராய விற்பனை, சூதாட்டம், பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தம்மையும் தமது குடும்பத்தாரையும் போசிக்கும் நோக்கில் அரசியல் நடத்துகின்றனர்.

தற்போதைய அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்காவிட்டால் நாடு பாரிய அழிவு களை சந்திக்க நேரிடும்.

நாட்டில் அநீதி மேலோங்கியுள்ளது. இதற்கு எதிரான போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானது.

மேலும் மக்களுக்கு தேர்தல் மீதான நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# புதிய கட்டட நிர்மாணத்திற்கு 9,200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டிட நிர்மானப் பணிகளுக்கான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 200 மில்லியன் ரூபா நிதி நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் அதாவுல்லாவினால் யாழ் மாநகரசபை முதல்வரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த பணிக்காக 9,200மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் முதற்கட்ட பணிக்காக இன்று 200 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவை படிப்படியாக வழங்கப்படும் என்றும் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவருத்திக் குழுக் கூட்டத்தில் இக் கட்டிட நிர்மாணம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் இதற்கமைய ஜனாதிபதி பணிப்புரை விடுத்த தற்கு அமைய அமைச்சரவை அங்கீகாரத் துடன் இந்த நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# நண்பர்கள் சமர் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மாவித்தியாலயம், முல்லை வித்தியாணந்தா கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் மோதும் நண்பர்களின் சமர் துடுப்பாட்டத்தின் முதலாவது சமர் நாளை வெள்ளிக்கிழமை நாளை மறுதினம் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன்படி முதல்நாள் ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.50 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாளான சனிக்கிழமை ஆட்டங்கள் முற்பகல் 9 மணி முதல் 12.10 மணி வரையும் நடைபெற்று இடைவேளைக்கு பின் பிற்பகல் 12.50 மணிமுதல் 4.40 மணிவரை நடைபெறவுள்ளன.

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ். இளங்கோ, மு/ வித்தியானந்த கல்லூரி அதிபர் கே. சிவலிங்கம் ஆகியயோரது தலைமையில் நடைபெறும்.

இந் நண்பர்களின் சமர் துடுப்பாட்டத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், சிறப்பு விருந்தினராக யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 75.75, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BSc Hons கணனி பொறியியலாளர்<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: B -1709 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்:5'2"<br>கி.பா: 90,7 இல் செவ்<br>தகைமை/தொழில் : O/L<br>தொ.இ: G -1698 |
| பிறப்பு: 1966 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4, சூரி, 9இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்:- வணிக முகாமைத்துவ பட்டதாரி முன்னாள் UNHCR (Self Employer)<br>தொ.இ: B -1719 | பிறப்பு: 1985 [illegible]<br>நட்சத்திரம்:அவிட்டம், 4 இல் செவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/ தொழில்: BSc வங்கியாளர்<br>தொ.இ: G-1704 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'6"<br>கி.பா: 15<br>தகைமை/ தொழில்: Bsc Hons அரச உத்தியோகம்<br>தொ.இ: B -1724 | பிறப்பு: 1985 இந்து வி[illegible]ஸ்வகுலம்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா:53, 8 இல் செவ், சூரி<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1755 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: B -1725 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்: 150 cm<br>கி.பா: 75, 8இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: BA (Hon[illegible]s) சமூகவியல்துறை, சிறுவர் பாதுகாப்பு உள சமூக உத்தியோகத்தர்<br>தொ.இ: G[illegible]-1757 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று-உயிர்! காக்க தயங்கும் ஜெ.!



கருணை மனு மீது குடியரசு தலைவர் எடுக்கும் காலதாமதத்தை காரணம் காட்டி **தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனை யாகக் குறைக்க முடியாது** என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள தீர்ப்பு, பேரறிவாளன், முருகன், சாந்தன் உள்ளிட்டவர்களின் தூக்குத்தண்டனை மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், மூவரின் உயிரைக் காப்பாற்ற தமிழக அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கலைஞர், பழ. நெடுமாறன், மருத்துவர் இராமதாஸ், வைகோ, திருமாவளவன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் மரண தண்டனைக்கு எதிரான அமைப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

நளினிக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட போது அதனை ஆயுள் தண்டனையாக குறைக்கும் வகையில் அமைச்சரவை கூட்டி தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அதனை அனுப்பி வைத்து தண்டனையை குறைத்தது தி.மு.க. அரசு. அதேபோல **ஜெயலலிதாவும் தற்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்** கலைஞர்.

தூக்குத்தண்டனை பெற்றவர்கள் அனுப்பும் கருணை மனுக்களைக் குடியரசுத் தலைவரும் அது தொடர்பான வழக்குகளை உச்ச நீதிமன்றங்களும் நிராகரித்துவரும் நிலையில் தூக்குத்தண்டனை பெற்றவர்களின் உயிர்களைக் காப்பாற்ற மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்கிற கேள்விகள் எழுந்துள்ள நிலையில் இதுகுறித்து ஆராயப்படுகிறது.

தமிழக சட்டமன்றத்தில் கடந்த 29.08.2011 இல் அறிக்கை வாசித்த ஜெயலலிதா கருணை மனு தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவின் படி குடியரசு தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

எனினும் மறுநாளே சட்ட மன்றத்தில் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மூன்று நபர்களின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குடியரசு தலைவர் குறைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினார். அப்போது அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்கின்ற குரல்கள் எழுந்த போதும் அதற்கு எந்தப் பதிலையும் ஜெயலலிதா சொல்லவில்லை.

தமிழக அரசின் நிலைப்பாடு இப்படியாக இருக்கும் நிலையில் சுமார் 20 மாதங்களுக்கு பின்னர் தமிழகத்தில் மீண்டும் அதே குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. இந்நிலையில் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா? என சட்டவல்லுநர்கள் சிலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஒருவர் விவாதித்த போது, கருணை மனு தொடர்பாக மாநில அரசுக்குரிய அதிகாரம் பற்றி அரசியலமைப்பு சட்டவிதி 161 கூறுகிறது. ஆனால் குடியரசு தலைவரால் நிராகரிக்கப்பட்ட நிகழ்வுகளில் இந்த விதி 161 ஐ பயன்படுத்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென 257(1) கூறுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டி அதனால் தனக்கு அதிகாரம் இல்லை என முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

257(1)ஆவது பிரிவு என்பது மத்திய அரசின் நிர்வாக வரம்புகளில் மாநில அரசு தலையிடக்கூடாது என்று தான் சொல்லியிருக்கிறது.

அதனால் இதனை 161 ஆவது பிரிவோடு தொடர்புபடுத்துவதே தவறு. காரணம் 161ஆவது பிரிவு என்பது மாநில அரசின் இறையாண்மைக்குரிய அதிகாரத்தைப்பற்றிக் கூறுவது. இறையாண்மை அதிகாரமும் மத்திய நிர்வாக வரம்பும் வெவ்வேறானவை , தொடர்பற்றவை யும்கூட. அதனால் இரண்டு பிரிவுகளையும் சம்பந்தப்படுத்தக்கூடாது. அதனால் நிர்வாக ரீதியிலான மத்திய உள்துறையின் கடித உத்தரவை இறையாண்மை அதிகாரம் கொண்ட தமிழக அரசு பொருட்படுத்தத் தேவையில்லை. ஆக தமிழக அரசு மனது வைத்தால் மூவரின் உயிரைக்காப்பாற்றிட முடியும். அதற்கான முழு அதிகாரமும் தமிழக அரசுக்கு இருக் கிறது. அதனால் 161 ஆவது பிரிவை பயன்படுத்தி தனது அதிகாரத்தை மாநில அரசு நிலைநிறுத்த வேண்டும். குடியரசு தலைவரை கேட்டுக் கொள்வதாக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதில் பயனில்லை. மாறாக தனது அமைச்சரவையை கூட்டி தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தா லேயே மூவரின் உயிரை பாதுகாக்க முடியும் என்கிறார்.

மேலும் தடா சட்டத்தின் கீழ் நடைபெற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர்களையும் சாதாரண வழக்குகளில் தண்டனை பெற்றவர்களையும் ஒப்பிடக்கூடாது என்று தீர்ப்பளித்துள்ளனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சட்டத்தின் முன்பு எல்லோரும் சமம் என்பது போலகுடியரசு தலைவர் மற்றும் ஆளுநரின் அதிகாரங்களுக்கு முன்பும் எல்லோரும் சமம் தான். அதனால் கருணை மனு விவகாரத்தில் சாதாரண குற்றம், பயங்கரவாத குற்றம் என பேதங்களுக்கு இடமளிக்கக்கூடாது.

பேரறிவாளன் உள்ளிட்ட மூவர் வழக்கினை தடாசட்டத்தின் படி விசாரித்ததே தவறு என்று இதே நீதிமன்றம் கூறியிருக்கிறது. அப்படி சொன்ன நீதிமன்றம் அதே சட்டத்தின்படி தான் தூக்குத் தண்டனையையும் விதித்தது. இது முரண்பாடானது மட்டுமல்ல நீதியை கொலை செய்ததற்குச் சமம். அதனால் புல்லரின் மனு மீதான தீர்ப்பினை பேரறிவாளன் விடயத்தில் ஒற்றுமைப்படுத்தக்கூடாது என்கிறார் அம் மூத்த வழக்கறிஞர்.

இது ஒருபுறம் இருக்க குடியரசு தலைவராலும் ஆளுநராலும் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர் மீண்டும் கருணை மனு போட முடியாது என்கிறார். செய்தி பரவியுள்ள நிலையில் இது பற்றி பேசிய உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் குறிப்பிடும் போது, கருணை மனு விவகாரத்தில் குடியரசு தலைவர், ஆளுநர் இருவருக்கும் சம அதிகாரம் உண்டு.. இருவருக்கும் இதில் முடிவு எடுக்க எல்லைகளற்ற அதிகாரம் இருக்கிறது. ஒருவர் மன்னித்தாலும் போதுமானது. மன்னிப்பு விடயத்தில் ஒருவர் மற்றவரை விட பெரியவர் என்கிற நிலை இல்லை. அதே சமயம் இத்தனை முறை தான் கருணை மனு அனுப்ப வேண்டும் என்கிற சட்டவிதிகள் எதுவும் இல்லை. அதனால் இரண்டாம் முறையாகவும் அனுப்பலாம். ஆக மாநில அரசின் அமைச்சரவை ஒப்புதலை நிறைவேற்றும் கடமை ஆளுந ருக்கு இருப்பதால் காலதாமதம் செய்யாமல் மூவரின் உயிரை காப்பாற்ற அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பவேண்டும் என தமிழக அரசு கூறுகிறது.

இது தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிமான் ஒருவருடைய கருத்து வெளியிடுகையில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றத்தை தருகிறது. இந்த நிலையில் தமிழக மக்களின் தொடர்ச்சியான அழுத்தங்கள் வலிமை பெறும் போதுதான் கருணை மனு விவகாரத்தில் புதிய சூழல் உருவாகும். அது மத்திய -மாநில அரசுகள் ஒரு நிலைப்பாட்டினை எடுக்க வழிவகுக்கலாம் என்றார். அரசு தரப்பு வட்டாரங்களில் விசாரித்த போது நளினிக்கு தூக்குத் தண்டனையை இரத்து செய்து கலைஞர் தீர்மானம் நிறைவேற்றிய போது ஜெயலலிதா கடுமையாக கண்டித்து அறிக்கை வெளியிட்டார். அதனால் இப்போது அமைச்சரவைகூடி முடிவெடுக்க ஜெயலலிதா தயங்குவதாகவே கருகின்றனர்.

*தமிழகத்தில் இருந்து வெளிவரும் நக்கீரன் இதழிலிருந்து*

# தமிழீழ சுதந்திர சாசன முரசறைவுக்கு ஏற்பாடு

அமெரிக்காவில் தமிழீழ சுதந்திர சாசன முறைசறைவு மாநாடு எதிர்வரும் மே 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ள நிலையில் மாநாட்டுக்கான பணிகள் தீவிரமடைந்துள்ளன.

கனடாவில் தமிழீழ சுதந்திர சாசன பணிகளை கவனிப்பதற்காக பணிமனை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. தமிழீழ சுதந்திர சாசனம் தொடர்பில் உலகத் தமிழர்கள் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்யும் பொருட்டு தொலைபேசி இலக்கமும் பாவனைக்கு வழங்கப்படவுள்ளது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை நினைவேந்தும் தமிழீழ தேசியத் துக்க நாளான மே 18 ஆம் திகதி தமிழீழ சுதந்திர சாசனம் உலகத் தமிழர்களின் முரசறைவாக அமையவுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.ருத்திரகுமாரன் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் மாநாடு இடம்பெறும் மண்டபத்துக்குச் சென்று முன்னேற்பாடுகளைக் கவனித்துள்ளனர்.

அதேவேளை தமிழீழ சுதந்திர சாசனம் உருவாக்கம் மற்றும் மாநாடு குறித்து நியூ ஜேர்சியில் இவ் ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கட்டைக்காட்டுப் பகுதியில் கால்நடைகள் திருட்டு

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கட்டைக்காடு கிராமத்தில் கடந்த ஒரு மாதகாலமாக நல்லின பசுக்கள் உட்பட 10ற்கு மேற்பட்ட கால்நடைகள் திருடப்பட்டுள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் மீள்குடியேறிய மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் கரைச்சி வடக்கு கால்நடை வளர்ப்பு கூட்டுறவு சங்கத்தால் வாழ்வாதாரத்தை மேம்படுத்த என வழங்கப்பட்ட கால்நடைகளே இவ்வாறு திருடப்பட்டு வருகின்றன.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இத்திருட்டு சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸாருக்கு தெரிவித்தும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இத்திருட்டை தடை செய்ய இத்துறை சார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-263)




யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு தலா 10 கூரைத்தகடுகள் யாழ். மாநகரசபையின் முஸ்லிம் உறுப்பினர் மௌலவி எம். சுபியானால் நேற்று முன்தினம் முஸ்லிம் தெருவிலுள்ள மக்கள் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியிடம் உறுப்பினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இந்தக் கூரைத்தகடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (படம்: எஸ்.ஆர்.கரன்)

# சேது சமுத்திரத் திட்டத்தால் மக்களுக்கு நன்மை இல்லை

(சென்னை)

சேது சமுத்திரத்திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது என தமிழக மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது. இந்திய உச்ச நீதிமன்றிடம் இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்த மனு ஆராயப்பட்ட சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்திற்கு விடயங்களை தெளிவுபடுத்திய தமிழக அரசின் பிரதிநிதிகள் அந்தத் திட்டத்தை கைவிட வேண்டும் என கோரியுள்ளனர்.

[illegible] ரீதியில் நன்மைகள் காணப் [illegible] சேது சமுத்திர திட்டம் மூலம் மக்களுக்கு எவ்வித நலன்களும் ஏற்பட போவதில்லை என தமிழக அரசின் பிரதிநிதிக்ள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் பாரிய சூழல் மற்றும் கலாசார பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்றும் இது குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட பச்சாவுரி குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தமிழகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக்கடல் வலயத்தில் மீன் வளம் பெருகிக் காணப்படுவதுடன் சேது சமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் மீன்வளம் அழிவடையும் எனவும் தமிழக மாநில அரசின் பிரதிநிதிகள் நீதிமன்றத்தில் மேலும் தெளிவு படுத்தியுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டி கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நெல்லியடி டூர்யா நகைப் பூங்காவின் உரிமையாளர் கே.அமலதாஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமராட்சி வடக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வல்வெட்டித்துறை நகரசபையின் உபதலைவர் க.சதீஸ் ஆகியோர் வீராங்கனைகளுக்கு கைலாகு கொடுத்து அறிமுகம் செய்யப்படுவதையும் மற்றும் அணி வீரர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் போட்டி ஒன்றில் தெல்லிப்பழை யூனியன் அணியை எதிர்த்து அல்வாய் வட நக்கீரன் அணியினர் மோதுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்;-எஸ்.செல்வதீபன்)

## முக்கிய அமைச்சர்கள் சிலர் ஐ.தே.கவுடன் இணைய விருப்பம்

### ஐ.தே.க.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முக்கியமான அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள விரும்புவதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளும்கட்சியின் முக்கியமான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களே இவ்வாறு அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இவர்கள் ஏற்கனவே இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக இவர்களின் பெயர் விபரங்களை வெளியிட முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பலரும் கட்சிக்கு ஆதரவளிக்க தயாராகி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கரப்பந்தாட்டம்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிரதேச சம்மேளனங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச ஆவரங்கால் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட பிரதேச சம்மேளன இளைஞர் கழக அணிகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தலைவர் எஸ். லக்ஷன் தெரிவித்துள்ளார். (அ-3-37)

## பிரதி ஆணையாளருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

வற்வரி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த தேசிய வருமான வரி திணைக்கள முன்னாள் பிரதி ஆணையாளர் ஏ.டபிள்யூ. அபேபிட்டியவிற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. வற்வரி மோசடி தொடர்பில் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவருக்கு 14 மாத கடூழிய சிறைத்தண்டனையும் ஐந்து இலட்ச ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டில் இடையூறு ஏற்படலாம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாட்டுக்கு இடையூறு ஏற்படலாம் என அரசாங்கம் அச்சம் கொள்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு சர்வதேச ரீதியாக எழுந்துள்ள அழுத்தங்களுக்கு இடையில் இம்மாநாட்டுடன் இணைந்த வகையில் நடத்தப்படும் வர்த்தக மாநாட்டுக்கு சிக்கல் நிலை ஏற்படும் என அரசாங்கம் அச்சம் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டுடன் இணைந்து இம்மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கையில் முதலீடு செய்யவுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான பொதுநலவாய மற்றும் பொதுநலவாய நாடுகள் அல்லாத நாடுகளின் வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் இந்த மாநாட்டை நடத்தக்கூடாது என்ற வலியுறுத்தல்களுக்கு மத்தியில் குறித்த வர்த்தக பிரதிநிதிகள் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இந்நிலைமையை சமாளிப்பதற்காக பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)


# கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் மூவர் 9 பாடங்களிலும் A சித்தியையும் 8AC, 7A2B, 7ABC, 7 மாணவர்கள் 6 பாடங்களுக்கு மேல் A தரச் சித்தியைப் பெற்றுள்ளதோடு 82.6 வீதமான மாணவர்கள் உயர் தரத்தில் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இதில் 59 மாணவர்கள் கணித, விஞ்ஞான துறைகளில் கற்க தகுதி பெற்றுள்ளனர். இச்சாதனையைப் புரிவதற்கு காரணமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



9A பெற்ற மாணவர்கள் முறையே ய.ஹர்சிகா, சி.சஜிபா, சி.கௌதமன்

| | |
|---|---|
| சிவபாலன் கௌதமன் | 9A |
| சிம்மேந்திரன் சஜிபா | 9A |
| யசோதரன் ஹர்சிகா | 9A |
| சண்முகராஜா கோடீஸ்வரன் | 8AC |
| சிவகுமார் திலக்சிகா | 7A2B |
| நாகேந்திரன் கோபிகா | 7ABC |
| சிவகருணாகரன் விதுஜன் | 6A3B |
| இராஜேந்திரன் மதுசனன் | 6A2BC |
| ஸ்ரீபன் நிலக்சன் | 6AB2C |
| இராமமூர்த்தி செந்தாளன் | 6ABCS |
| தவச்செல்வன் சிராந்திகா | 6A3C |
| நகுலேஸ்வரன் சாம்பவி | 6AB2C |
| நந்தகுமார் கோபிகா | 6A2BC |



சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள்

வாழ்த்துவோர்:

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

(சி/3167)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

444

## உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்!



ஸ்ரீபுரம் கிராமத்து மக்கள் தங் கள் கிராமத்தைச் சேர்ந்த சீதாராம் என்ற கனவானிடம் பெருமதிப்பு வைத்து இருந்த னர். காரணம் அவருடைய மதி நுட்பமும், நேர்மையும், நல்ல குணங்களுமே! ஒரு நாள் சீதாராம் தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டு இருந்த போது அவரை சந்திக்க ஒரு புதிய நபர் வந்தார். வந்தவர் ஐயா! என் பெயர் தேவா! நான் பக்கத்து கிராமத்தை சேர்ந்த வன். நான் உங்கள் கிராமத் தில் குடியேற விரும்புகிறேன் என்றார்.

உங்கள் கிராமத்தை விட்டு வெளியேற என்ன காரணம்? என்று கேட்டார் சீதாராம். அதற்கு தேவா என் கிராமத்தில் இருப் பவர்கள் அனைவரும் கடைந் தெடுத்த அயோக்கியர்கள்! அவர்களுடன் வசிக்க நான் விரும்ப வில்லை என்றார். அதற்கு சீதாராம் இந்தக் கிரா மத்தில் மட்டும் என்ன வாழ் கிறதாம்! இங்குள்ளவர்களும் அப்படித்தான்! என்று கூற அது கேட்டு திடுக்கிட்ட தேவா அப் படியா? என்றவர் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டார்.

சீதாராமை சுற்றியிருந்தவர்கள் அவர் ஏன் தங்கள் கிராமத்தவர் களையே கேவலமாகப் பேசுகி றார் என்று திகைத்தனர்.

சில நாட்களுக்குப் பின் அதே தேவா மற்றொரு நபருடன் சீதா ராமை சந்திக்க வந்தார். ஐயா, இவர் பெயர் ராஜாராம்! இவரும் என் னுடைய கிராமத்தைச் சேர்ந்தவர் தான்! இவரும் அதைவிட்டு வெளியேறி உங்கள் கிராமத்தில் குடியேற விரும்புகிறார். நீங்கள் உங்கள் கிராமத்தைப் பற்றி சொன்னதை இவருக்கு சொன் னேன். அப்படியும் கேளாமல், அவர் உங்களைப் பார்க்க வந் திருக்கிறார். நேரடியாக உங்கள் கிராமத்தினரைப் பற்றி உங்கள் வாயினால் கேட்க ஆசைப் படுகிறார் என்றார்.

அதற்கு சீதாராம் ராஜாராமிடம் உங்கள் கிராமத்தில் உள்ளவர் கள் மோசமானவர்களா? என்றார்.

அதற்கு ராஜாராம், ஐயா! என் கிராமத்தினர் மோசம் என்று நான் சொல்லமாட்டேன். என்னை பொறுத்தவரை அவர்கள் நல்ல வர்களே! ஒரு மாறுதலுக்காக மட்டுமே இங்கு குடியேற விரு புகிறேன். தவிர இங்கு உங் களைப் போன்ற மிக நல்ல மனி தர்களின் தொடர்பு கிடைக் கிறது என்பதும் மிக முக்கிய காரணம்! என்றார். அதற்கு சீதாராம் அப்படி என்றால் நீங் கள் தாராளமாக இங்கு வரலாம். ஏனெலில் இங்கு இருப்பவர் கள் அனைவரும் நல்லவர்கள் தான் என்றார்.

அது கேட்டு ஆச்சரியமுற்ற தேவா எனக்கு உங்கள் கிராம த்தினரைப் பற்றி வேறுவித மாக சொன்னீர்களே! என்றார். அதற்கு சீதாராம் நம்மை சுற்றியிருப்பவர்கள் நல்லவர் களா கெட்டவர்களா என்பது நம்முடைய கண்ணோட்டத் தைப் பொறுத்தது. உங்கள் நோக்கில் உங்கள் கிராமத்தவர் அயோக்கியர்களாகத் தெரிகி ன்றனர். ஆனால் ராஜாராமின் பார் வையில் அவர்கள் நல்லவர் களாகத் தோன்றுகிறார்கள். நாம் எப்படியிருக் கிறோமோ அதுபோல் தான் ஏனையவர்க ளும் இருப்பதாகத் தோன்றும். நீங்கள் இந்த கிராமத்துக்கு வந்தால் இங்கு உள்ளவர்களும் உங்களுக்கு கெட்டவர்களா கவே தோன்றுவர். அப்படிப்ப



ட்ட ஒருவர் இந்த கிராமத்துக்கு வருவதை நான் விரும்பவில்லை என்றார்.

உடனே தேவாவும் ராஜாரா மும் ஐயா! இப்போது தான் எங்களுக்கு உண்மை புரிந் தது.


நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டு வெளியேறப் போவ தில்லை. உங்களது அறிவுரை க்கு நன்றி என்று கூறி விட்டு திரும்பிச் சென்றனர்.

## அம்புலிமாமா கதைகள்

## கல்யாணப் பரிசு

இளவரசன் அனந்தசேன னுக்குத் திருமணம் செய்து வைக்க மும்மரமாக முயற்சிகள் நடைபெற்று வந்தன. ஒரு நாள் அனந்தனுக்கு திரிபுர நாட்டு இளவரசி சசிரேகாவின் ஓவியம் கிடைக்க அது அவனுக்கு மிக வும் பிடித்துப் போக அவன் சசி ரேகாவின் அழகுக்கு ஏற்ப அறிவு உள்ளதா என்று சோதி க்க விரும்பி அவளுக்கு மரவள் ளிக் கிழங்கை பரிசாக அனுப்பி னான். அதைப் பெற்றுக் கொண்ட சசிரேகா அவனுக்கு ஒரு கூடை நிறைய சோளம் அனுப்பினாள். அதற்குப் பதிலாக அனந்தன் அவளுக்கு கூடை நிறைய தினை அனுப்ப அனுப்ப அவள் இரண்டு கூடை அரிசி அனுப்பினாள். அத்துடன் நிற்க விரும்பாத அனந்தன் அவளுக்கு ஒரு நாய்க்குட்டியை பரிசாக அனுப்ப அவள் பதிலுக்கு ஒரு குரங்கை அனுப்பி வைத்தாள்.

உடனே தன் தந்தையிடம் சென்ற அனந்தசேனன் சசிரேகா வையே தனக்கு மணமுடிக்கு மாறு கூறியவன் அதற்கான கார ணத்தையும் விளக்கினான். முத லில் நான் அவளுக்கு மரவள் ளிக்கிழங்கு பரிசாக அனுப்பி அவள் நாடு வளமுடையதா என்று சோதித்தேன். சோளம் உண்ணும் அளவுக்கு வளம் உள்ளது என்று அவள் சோள த்தை பரிசாக அனுப்பினாள். சோளத்தை விட தினை உண் ணும் நாடாக இருந்தால் மக்கள் வசதியுள்ளவர்கள் என்று ஊகிக்கலாம் என்று பொருள் பட தினை அனுப்பினேன். பதி லுக்கு ஏன் அரிசிச்சோறே உண் ணும் அளவிற்கு வளம் படை த்த நாடு என்று அவள் அரிசி அனுப்பினாள். அவளுக்கு நாய்கள் பிடிக்கும் என்று தகவல் அறிந்து நாயை நான் அனுப்ப அவள் நான் ஆஞ்ச நேய பக்தன் என்ற இரகசி யத்தை அறிந்து குரங்கை அனு ப்பினாள் என்றான்.



ஆகா! அவள் உனக்கு மிகவும் பொருத்தமானவள்! என்று மன்னரும் ஆமோதி த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

32



“ஊதியத்தை மட்டும் விடுவிக்கச் சொல்லவா?”

அவசரமாகத் தூதுவர்கள் இடைமறித்தனர்.

“அக்கலத்திற்கு விடுகை நட்டஈடாக ஆயிரம் போர்த்துக்கல் பொற்காசுகள். தருகிறோம்...விட்டு விடுங்கள்.”

மன்னன் இறங்கி வந்தான்.

“நீங்கள் இவ்வளவு சொல்வதால் கேட்கிறேன். பிடிபட்ட மரக்கலத்திலுள்ள பொருட்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறேன். மரக்கலத்தை அரச சொத்தாக்குகிறேன்...”

சங்கிலியுடன் வாதித்து விலை மதிப்பற்ற பொற்கட்டிகளையும் பட்டுத்துணிகளையும் இழக்க தூதுவர்கள் விரும்பவில்லை. தலைக்கு

“இரண்டும் ஒன்றா? அவர்கள் எங்களுடன் இரண்டறக் கலந்தவர்கள். உசன், நல்லூர், நாவாந்துறை ஆகிய விடங்களில் குடியேறி யவர்கள்.கூட வாழ்பவர்கள்.”

“பலர் தமிழ் பெண்களை மணந்திருக்கிறார்களே?”

“அதிலென்ன? நீங்கள் வியாபார ஆதிக்கத்தோடு மதம் பரப்புதலையும் இலக்காக் கொண்டவர்கள். குடியேற்ற வாசிகளல்லர்...போர்த்துக்கேயக் காசுகளையும் விலையுயர்ந்த பட்டாடைகளையும் மக்களுக்கு கொடுத்து மயக்கி மதம் மாற்ற உங்களால் முடியும்... மன்னாரில் அதைத்தான் செய்து என்னை கொலைகாரனாக்கினீர்கள்.”

போர்த்துக்கேயத்தூதுவர்கள் விடை பெற்றனர்.

லோர் சத்திய வேதத்தில் இணைந்து கொண்டனர். மிகுதியானவர்களைப் பிரதம ஃபாதர்

டார். அவர் அனுப்பிய சீடன் வாளுக்கு இரையாகினான்.உயிர் பிச்சை கேட்டு இறந்தவர்களை



புராதன மன்னார்த்தீவு-சித்திரம்

ஆண்டார். பின்னர் பொலநறுவை சிங்கள மன்னன் ஒருவனால் துரத்தப்பட்டு வடபுலத்திற்கு ஓடிவந்தார். அங்கிருந்த பௌத்தர்கள் அனைவரையும் தென்புலம் துரத்தவில்லையா? அவருக்குப் பயந்து தலைநகர்கள் மாறவில்லையா? வடக்கே கரைந்துறைந்த கலிங்கத்து மாகனை சிங்கை நகரின் இராசப் பிரதிநிதி புவனேகபாகு என்பவன், விசய காலிங்க ஆரியச் சக்கரவர்த்தி யென முடிபுனைந்தார். அந்த ஆரியச்சக்கரவர்த்தி யாழப்பாண நகரியையும் கந்தவேளுக்கு ஓர் ஆலயத்தையும்அமைத்து தலைநகர் யாழ்ப்பாணத்துக்கு மாற்ற குடாநாட்டில் எஞ்சியிருந்த பௌத்தவர்களும் தென்புலம் ஓடவில்லையா? அதற்கெல்லாம் அவர்கள் உங்களைப்போல கவலைப்பட்டிருப்பார்களா? இதெல்லாம் ஆட்சியில் சகஜம்...” என்றாள் அரசமாதேவி.

அவள் சொன்ன காரணங்களை சங்கிலி ஏற்கத்தயாராக வில்லை. அவன் உள்ளம் மன்னார் சம்ஹாரக் கொடுமைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராவில்லை.

## மன்னார் சம்ஹாரம்

யும் சிரம் கொய்தோம். என்னிடமோ படைவீரர்களிடமோ இரக்கம் கொஞ்சமும் இருக்கவில்லை. இது மதம் சார்ந்ததன்று. அரசியல் சார்ந்தது... வருங்கால சமூகம் எப்படி எடுக்கப் போகிறதோ?” என்று சங்கிலி புலம்பினான்.

“கவலையை விடுங்கள் அரசே.பாராளும் மன்னன் எத்தனையோ சிக்கல்களை சமாளிக்க வேண்டும். அதிலும் மதம் சம்பந்தப்படும் போது நாட்டு நலன் முதன்மைப்படுகின்றது. நீங்கள் செய்தவை தவறுகளாகா., நாட்டிற்குச் செய்தவை. தங்கள் முன்னோன் ஆரியச்சக்கரவர்த்தி கலிங்கத்து மாகனாகப் பொலநறுவையை

வந்தது, தலைப்பாகையோடு போயிற்று.

“விடைபெறு முன் இன்னொரு கோரிக்கை”

“கேளுங்கள்...”

“தங்கள் அரசில் நாங்கள் வியாபாரம் செய்ய அனுமதி தரவேண்டும்.”

“இதென்ன கேள்வி? அப்படி அனுமதிக்க முடியாது.”

“தாங்கள் முஸ்லிம்களை வியாபாரம்செய்ய அனுமதிக்கிறீர்களே?”

மஞ்சத்தில் உறக்கம் வராது மன்னன் தவித்தான். அவன் அருகில் படுத்திருந்த ராணி அரசமாதேவி அவன் உறக்க மற்ற தவிப்பை அவதானித்தாள்.

“உறக்கமே வரவில்லை ராணி. கண்களை மூடினால் மன்னார்த் தோட்டவெளிக் கிராமமும் எமது வாள்களுக்குப் பலியான மக்களும் தோன்றுகின்றனர். தூத்துக்குடி வாசிகளான பரதவிற் பெரும்பா

பிரான்சிஸ் சவேரியார் பாதிரியார் மதம் மாற்றினாராம். அதனைக் கேள்வியுற்ற மன்னார்த் தோட்டவெளி மக்களும் சவேரியருக்குத் தூது அனுப்பினாராம். அந்நேரத்தில் வேறு அவசிய பணிகள் காரணமாகச் சவேரிய குருவானவர் தன் பெயர் கொண்ட சீடனை மன்னாருக்கு இப்பணிக்காக அனுப்பி வைத்தாராம். பலியானவர் எண்ணிக்கை அறுநூறாகும். பிரதம குரு தப்பிவிட்

செங்கை.ஆழியான்

(தொடரும்)

**அண்மையில் அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு வந்தபொழுது படையினரால் கடத்தப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்த குமார் என்ற தமிழ் இளைஞனின் கதை-**
***அவுஸ்திரேலியன் புரோட்காஸ்ரிங் கோப்பிரேசன் றிப்போர்டர் ஹீதெர் இவார்ட்***

TREVOR GRANT, தமிழர் அகதிகள் சபை கடந்த புதன்கிழமை குமாரை மருத்துவ சோதனை செய்த வைத்தியர் தமிழர் அகதிகள் சபைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். இந்த வைத்தியர் குமாரின் காயங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்திருந்தார். இவர் குமாரின் நிலை தொடர்பாக எமக்கு அறிவித்தன் பின்னர் நாங்கள் குமாரைத் தொடர்புகொண்டோம்.

குமார் அவசர உளநல மருத்துவத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என இவரைப் பரிசோதித்த வைத்தியர், மருத்துவ அறிக்கை சமர்ப்பித்திருந்தார். குமார் இலங்கை இராணு


உறுதிப்படுத்தும் விதமாக ஆவணங்களை வழங்கியுள்ளார்.”

கோர்டன் வெய்ஸ், இலங்கைக்கான முன்னாள் ஐ.நா.பேச்சாளர்: “இதனை நிச்சயமாக நம்ப முடியும். கடந்தசில மாதங்களாக இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ.நா மனித உரிமை ஆணையகம் என்பன பல்வேறு அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.”

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது கோர்டன் வெய்ஸ் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள்

என்னிடமோ அல்லது இலங்கை அரசாங்க அதிகாரிகள் எவரிடமோ தனது பெயர் மற்றும் அடையாளங்களை கூறவேண்டும். அவ்வாறு செய்தபின்னரே இதனை நாம் ஆராயலாம் என்று குறிப்பிட்டுள்ளது அதிசயிக்கத்தக்கது.

கோர்டன் வெய்ஸ்: “இலங்கை அரசாங்கத்தின் பதில் முகவராக கடமையாற்றும் உயர் ஆணையாளர், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படுவதால், இவ்வாறான குற்றச்சட்டுக்களை நிராகரிப்பார் என்பதில் எவ்வித ஆச்சரியமும்



கம்நம்புவதில்லை. இம்மாத முற்பகுதியில் படகுமூலம் ஜெரல்ரன் கடற்பரப்பில் கரையேறிய 38 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போது திருப்பி அனுப்பியுள்ளது.

பொப் கார், அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் (பெப் 14): “2010 லிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் எவரும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் நடைபெறவில்லை. இதற்கான சாட்சியங்கள் எதுவுமில்லை. இலங்கையில் தமிழர்கள் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளதாலேயே இவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்கின்றனர் எனக் கூறுவது மிகப்பிழையானது என நான் கருதுகிறேன்..”

“அவர்கள் எனது முதுகைப் பார்த்தபோது எனக்கு என்ன நடந்ததென்பதை அறிந்து கொண்டார்கள் எனவும் பொதுவில் இலங்கையில் நடைபெறும் நிறையச் சம்பவங்கள் வெளியுலகிற்கு தெரிவதில்லை” என்றும் குமார் தெரிவித்தார்.

குமாரின் காயமானது இவரால் வேலை செய்ய முடியாது என்பதை உறுதிப்படுத்தப்படுகிறது. இவர் தற்போது நுழைவுவிசாவை இழக்கின்ற அபாயத்தில் உள்ளார். இது நடந்தால், இவர் ஒரு மாதத்தில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார். இதனால் இவர் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இத்தகைய இக்கட்டான நிலையில் உள்ள குமார் இறுதியாக, இச்சம்பவத்தை என்னால் மறக்க முடியாது. இவ்வாறான பயங்கர அனுபவத்தை எவரும் பெறக்கூடாது, இத்தகைய தண்டனைகளை யாரும் பெறக்கூடாது என கடவுளை வணங்குகிறேன் என்று கூறிமுடித்தார்.

-முற்றும்-

## தமிழனின் தீக்காயங்கள்...!!

வப் புலனாய்வினரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பிகளால் எரிக்கப்பட்டுள்ளார் எனவும் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களின் உளநலம் தொடர்பில் கவனம் செலுத்தும் ஆலோசகரான பேராசிரியர் லூயிஸ் நியுமனிடமும் தமிழர் அகதிகள் சபை, குமாரின் உளநலம் தொடர்பாக ஆலோசனை பெற்றுள்ளது.

லூயிஸ் நியூமன்: “எனது பார்வையில் குமார் தொடர்பான கதை நம்பகமானது. குமார் இதனை

சபையின் பேச்சாளராக பணியாற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குமார் மேலும் தெரிவிக்கையில், “நான் இலங்கைக்குத் திரும்பிச் சென்றால் கொல்லப்படுவேன் என்பதை நிச்சயமாக அறிவேன்” என்றார்.

திசார சமரசிங்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர் ஆணையாளர்: “இவ்வாறான பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்வித உண்மையுமில்லை. குமார் என்கின்ற இந்த நபர் இவ்வாறான முறையில் நடத்தப்பட்டிருந்தால்

மேற்கூறப்பட்ட விதமான ஆபத்தை குமார் எதிர்கொள்ள விரும்பவில்லை எனவும் இலங்கையிலுள்ள குமாரின் குடும்பத்தவர்கள் அங்கே சித்திரைவதைப்படுத்தப்படலாம் எனவும் குமாரின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இதனையே குமாரும் கூறுகிறார்.

மேலும் திசார சமரசிங்க தெரிவிக்கையில், இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான பொய்யான சம்பவங்கள் கூறப்படுகின்றன. இலங்கை இந்த விடயத்தில் வெளிப்படையாக நடக்கிறது என்கிறார்.

மில்லை. யுத்த காலத்தில தம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தினர் என்கின்ற குற்றச்சாட்டைக் கூட இலங்கை அரசாங்க அதிகாரிகள் தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர். இலங்கை அரசாங்கம் போரின்போது பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்டபோதும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை இந்த அரசாங்கம் நிராகரித்து வருகின்றமை புதிதல்ல.”

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் இடம்பெறும்போதும் இவை எதனையும் அவுஸ்திரேலிய அரசாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கூட்டமைப்பின் ஆட்சியை கொண்டுவர அமெ.தூதுவர் முயற்சி

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான சூழ்நிலை ஏற்பட்டு இடம் பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களை அரசாங்கம் மீள குடியேற்ற முற்படும் பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இதனை இன ரீதியாக சிந்திக்கின்றனர் என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் வாழும் ஆயிரம் வறிய குடும்பங்களுக்கு 175 மில்லியன் ரூபா நிதியை வீடமைப்புக் கடனாக வழங்கி வைக்கும் வைபவம் பிலியந்தலை மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

தமிழ் மக்களுக்கு மட்டுமே வடமாகாணம் பூர்வீக நிலம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் சொந்தம் கொண்டாடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் அவர்களது அரசியல் இலாபத்திற்காகவே தமிழ் மக்களைத் தூண்டி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். காலத்திற்கு காலம் தேர்தல்கள் வரும் போது அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இன ரீதியான செயற்பாடுகள் இடம்பிடிக்கின்றன.

ஆனால் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மேல் மாகாணத்தில் எந்தப் பகுதிக்கும் சென்று குடியேறி வாழக்கூடிய சமாதான சூழலை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஏன் வடக்கில் மட்டும் 20வருடங்களுக்கு முன் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களை மீளக் குடியேற்றும் போது இவர்கள் இன ரீதியாகச் சிந்தித்து இனக்குரோதங்களை மீண்டும் தமிழ் மக்களிடையே தூவி ஆர்ப்பாட்டம் நடத்து கின்றனர்.

அமெரிக்க தூதுவர் அண்மையில் கொழும்பு, காலி முகத்திடலில் குப்பை பொறுக்கும் காட்சிகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன.

அவர் அவருக்குரிய வரம்புக்குள் நில்லாமல் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் முக்கிய உறுப்பினர்களை கொழும்புக்கு அழைத்து இரகசிய பேச்சுவார்த்தை நடத்துகின்றார். மேலும் அவர் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களைப் பிரிப்பதற்கே துணை போகின்றார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாகாண சபையில் உள்ள ஆட்சியைப் பிரித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டாச்சியை ஏற்படுத்துவதற்கு முயலுகின்றார். அதேபோன்று வட மாகாணசபையிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆட்சியைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கத் தூதுவர் செயற்படுகின்றார். இந்த நாட்டை முழுமையான குப்பை மேடாக்குவதற்கே அவர் முயற் சித்து வருகின்றார்.

இந்த மின் கட்டண அதிகரிப்பை மீள் மாற்றம் செய்து குறைந்த வீட்டுப் பாவனையாளர்களான ஏழை மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் மின்கட்டணம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்.

ஏழை மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதொரு திட்டத்தினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்திற்கொண்டு அறிவிப்பார் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## புனரமைக்கப்பட்ட பத்து பாலங்களை திறப்பது எப்போது?

பூநகரி சங்குப்பிட்டி வீதியில் சென்ற ஆண்டில் ஆரம்பித்து வேலை முடிவடைந்த நிலையில் உள்ள பத்துக்கு மேற்பட்ட பாலங்களை போக்குவரத்துக்காக திறந்து விடப்படாமையால் தாம் பெரும் சிரமம் அடைவதாக பேருந்து சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாலங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டு பாரிய குன்றும் குழியுமாக உள்ள துணை வீதியால் வாகனங்களைத் திருப்பி எடுப்பதில் பாரிய சிரமத்தை அடைவதோடு நேரமும் வீணே செல்வதோடு வாகனங்களும் சேதமடைவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வேலை முடிவடைந்த பாலங்களுக்கு மேலாக பிரயாணத்தை மேற்கொள்வதற்கு உரிய பகுதியினர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-84)

## சூரிய மின்சாரம் மூலம் மீன்களை உலர்த்தும் நவீன சாதனம் அறிமுகம்

(கொழும்பு)

சூரிய மின்சாரத்தைப் பயன்படுத்தி மீன்களை உலர்த்தி உயர்ரக கருவாடு தயாரிக்கும் கூடு வடிவிலான புதிய சாதனம் ஒன்று புத்தளம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சினால் நாத்தாண்டியில் உள்ள மூதுகட்டுவ என்ற மீனவக் கிராமத்தில் இந்த சூரிய சக்தி மின்கூடு ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மண் மற்றும் தூசி கலக்காத தூய்மையான நிலையில் நாளொன்றுக்கு 120 கிலோ மீன்வகைகளை உலர்த்தக் கூடியதாக இந்தக் கூடு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பராமரிப்புச் செலவுகள் மிகவும் குறைவானதோடு கடற்கரைப் பிரதேசங்களில் மிக இலகுவாக இந்தக் கூடுகளை நிறுவ முடியும்.

இதேபோன்ற கூடுகள் மீன்வளம் அதிகளவில் உள்ள நீர்கொழும்பு ,புத்தளம் மற்றும் இலங்கையின் வடக்கு, கிழக்கு கடற் பிரதேசங்களிலும் அமைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதுகட்டுவ பிரதேச மீனவர் சங்கத்தினரிடம் இதனை ஒப்படைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாத்தாண்டி பிரதேச செயலாளர் உட்பட மாகாணசபை அமைச்சர், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.(அ-2)

## கடந்த ஆண்டில் 29 இலட்சம் சாரதிகளுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கடந்த ஆண்டு மாத்திரம் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மீறிய 29 இலட்சம் வாகன சாரதிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் வீதி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள 38 இலட்சம் பேருக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இவர்களிலேயே 29 இலட்சம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை 44 இலட்சம் வாகனங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

வாகன சாரதிகள், பயணிகள், பாதசாரிகள் ஆகிய மூன்று தரப்பினர்களின் பொறுப்பற்ற தன்மையும் கவனயீனமுமே தொடர் விபத்துக்களுக்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வாகனம் செலுத்தும் சாரதிகளில் சுமார் ஆறு இலட்சம் பேருக்கு சட்டரீதியான அனுமதிப்பத்திரம் இல்லையென தெரிய வந்துள்ளது.

18 வயது பூர்த்தியடையாத பாடசாலை மாணவர்கள் கூட சாரதி அனுமதிப் பத்திரமின்றி நவீன வாகனங்களைச் செலுத்திய நிலையில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

அதற்கு தேவையான சட்டதிட்டங்கள், செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், பொது மக்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்குதல் என்பன தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் வாகன போக்குவரத்து பிரிவு பொலிஸாருக்கும் ஆலோசனைகளையும் பொலிஸ்மா அதிபர் வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்தார். (அ-2)

## நீதியமைச்சுக்கு வழங்கிய நிதியை மீள பெற்றுக் கொண்டது அமெரிக்கா

இலங்கைக்கான உதவியை அமெரிக்கா மீளப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீதிஅமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகையே இவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.


உதவி அடிப்படையில் வழங்கப்பட்ட 450 மில்லியன் ரூபா பணம் இவ்வாறு மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் வினை திறனின்மை மற்றும் கவனயீனம் காரணமாகவே இந்த உதவுதொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதி அமைச்சு அல்லது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கவனயீனம் காரணமாக மீளப் பெற்றுக் கொள்ளப்பட்ட மேற்படி உதவித் தொகை நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்டிருந்தது.

குறித்த உதவித்தொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டதனை அமெரிக்கத் தூதரகமும் உறுதி செய்துள்ளது.

இதேவேளை குறித்த உதவுதொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் அந்நிதியை மீளவும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சின் செயலாளர் காமலீனி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த உதவுதொகை தொடர்பில் பொருளாதார அமைச்சே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் உதவித் தொகை மீள அளிக்கப்பட மாட்டாது என அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. (அ-2)




உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆர். விஜயலட்சுமி தலைமையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் மற்றும் உலக வங்கி பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கும் மக்களுக்கும் வெற்றிகிட்ட வேண்டும்

## ஜனாதிபதி வாழ்த்து

தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அணி திரண்டுள்ள உழைக்கும் மக்களுடன் தானும் சிநேகபூர்வமாக இணைந்து கொண்டு அவர்களின் உயர்வுக்காக உழைப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச் தொழிலாளர் தினத்தை மதிப்புடனும் கௌரவத்துடனும் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பத்தை எமக்களித்த் எமது நாட்டின் உழைக்கும் மக்களுக்கு தேசத்தின் நன்றிகளை மிகுந்த கௌரவத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

எமது நாடு இன்று ஒரு மத்தியதர வருமானம் பெறும் நாடாகவுள்ளது. தேசிய பொருளாதாரத்தை சரியான திசையில் செலுத்தியதன் காரணமாக இந்த அடைவை நாடு அடைந்துள்ளது. இதன் பின்னாலுள்ள மிக முக்கிய சக்தியாக எமது நாட்டின் உழைக்கும் மக்கள் இருக்கின்றனர்.

அவர்கள் எமது நாட்டின் எதிர்காலம் குறித்த மிகச் சரியான பார்வையைக் கொண்டுள்ளனர். அவர்கள் நாட்டினதும் அரசாங்கத்தினதும் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கு மிகுந்த பொறுப்புணர்வுடன் எப்போதும் செயற்படுகின்றனர்.



இந்த ஒத்துழைப்பு சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் பாரம்பரியங்களைப் பாதுகாத்துள்ளதுடன் உலகின் உழைக்கும் மக்களின் கௌரவத்திற்கு பங்களிப்பு செய்யும் நாட்டை கட்டியெழுப்புவதிலும் உதவியுள்ளது.

எனவே, உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஒரு சமூகத்தை நாம் இன்று கட்டியெழுப்பியுள்ளோம். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளைச்சேர்ந்த தொழிலாளர்கள் அனுபவிக்கும் பெரும்பாலான உரிமைகளை எமது மக்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

சிறந்த தொழில்நுட்பம் , போக்குவரத்து, கல்வி மற் றும் சுகாதார வசதிகளின் ஊடாக எமது உழைக்கும் மக் களின் வாழ்க்கைத்தரம் மேம் பட்டுள்ளது.

இந்த உரிமைகளைப்பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கும் முன்னேற்ற நடவடிக்கை களை தொடர்ந்தும் முன் கொண்டு செல்வதற்கு, இந்த சர்வதேச தொழிலாளர் தினத்தில் நாம் திட உறுதியுடனும் அர்ப்பணத்துடனும் கைகோர்ப்போம்.

எமது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்யும் உழைக்கும் மக்களுக்கும்தொழிற்சங்கச்செயற்பாடுகளுக்கும் வெற்றி கிட்ட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மஹோற்சவ தினங்களில் தெய்வீக பேருரை

(குருமன்காடு)

வவுனியா, தவசிக்குளம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவர் ஆலய மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் காலை,மாலைகளில் அபிஷேகம்,விசேட பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளி வீதி எழுந்தருளல் இடம்பெறுகிறது.

தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணிவரை வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்தும் மகாபாரதம் தொடர் தெய்வீகப் பேருரை இடம் பெற்று வருகிறது.

சொற்பொழிவிலிருந்து அடியார்களுக்கான சமய அறிவுப் பரீட்சையையும் ஆலய பரிபாலன சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

வைரவப் பெருமானின் அவதார தினமான சித்திரைப் பரணியான எதிர்வரும் 9 ஆம் திகதியன்று தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் திருவூஞ்சல், பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும்.

(அ-2-250)

## வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில்

அரச பதிவு மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை மேலும் விரிவுபடுத்தப்படுகிறது.

அதன்படி தமது சங்க உறுப்பினர்கள் அனைத்து மேலதிக பணிகளில் இருந்துவ; விலக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் மஹிந்த லியனகே தெரிவித்துள்ளார்.

தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்பட்டாமைக்கு எதிரிப்பு தெரிவித்து கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி தொடக்கம் அரச பதிவு மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.

எனினும் இதுவரை தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.அதனால் தொழிற்சங்க நடவடிக்கையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சங்கம் கூறியுள்ளது.

அதன்படி இரவுக்கடமை,கிழமை இறுதி நாள் கடமை, அரச விடுமுறை நாள் சேவை மற்றும் அனைத்து நடமாடும் சேவைகளில் இருந்தும் விலகுவதாக அரச பதிவு மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

## ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பணம் செலுத்தாத முதலாளிகள்

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அங்கத்துவ பணத்தை செலுத்தாத 13 ஆயிரத்து 134 முதலாளிமாரிடமிருந்து 4 ஆயிரத்து 603 மில்லியன் ரூபாவை அறவிட ஊழியர் சேமலாப நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பணம் செலுத்தாத முதலாளிமார் தொடர்பாக தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகமும் அதனோடு தொடர்பான 52 நிறுவனங்களும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஊழியர் சேமலாப நிதிய ஆணையர் டீ.பீ.கே.ஆர்.வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஊழியர் மேசலாப நிதியத்துக்குப் பணம் செலுத்தாமல் சிவப்பு அறிவித்தல்களையும் தவிர்த்துக் கொண்டு இருக்கும் 2ஆயிரத்து 991 முதலாளிமாரிடமிருந்து ஆயிரத்து 387 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

7ஆயிரத்து 874 முதலாளிமார்களுக்கு இறுதி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொழிலாளர் உரிமையான ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வழங்கி அதன் அனுகூலங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



மின்சாரக் கட்டண உயர்வை கண்டித்து கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன ஏற்பாடு செய்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது...

## வடக்கு மாகாண தேர்தலுக்கு முன்னர் கருத்து முரண்பாடுகளை களையுங்கள்

### கூட்டமைப்புக்கு ரணில் அறிவுரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த கட்சிகள் தமக்குள் இருக்கின்ற கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் இந்த சந்திப்பின் போது கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் முன்னதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமந்திரனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்து கலந்துரையாடினார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்புக்கள் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், சில விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருப்பதனை அவர்கள் யாவரும் ஒத்துக்கொண்டுள்ளனர். இருப்பினும் இவர்கள் பிளவுபடவில்லை. ஆனால், அரசாங்கம் பிரிவை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என்றார். இதேவேளை, வடக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஐந்து கட்சிகளின் தலைவர்களை மே மாதம் 11,12 ஆகிய திகதிகளில் சந்திக்கவுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமையை கொண்டுவரும் நோக்கிலேயே இந்த கூட்டங்களை சிவில் அமைப்புகள் ஒழுங்கு செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(அ-2)

## ஹெரோயின் வைத்திருந்தவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவு அருணோதய மாவத்தையில் குறித்த பெண்ணிடம் இருந்து 2 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜகிரியப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டவராவார். சந்தேத நபர் புதுக்கடை இலக்கம் 4 நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் மாநாடு இலங்கைக்கு வெற்றியா?

CHOGM 2013
Sri Lanka

கொமன்வெல்த் உச்சிமாநாட்டை வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்தும் முடிவில், எந்த மாற்றமும் இல்லை என்று கொமன்வெல்த் அமைச்சர்கள் நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி வரும் நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொமன்வெல்த் தலைவர்களின் உச்சிமாநாடு, கொழும்பில் நடைபெறும் என்பதை கொமன்வெல்த் செயலர் கமலேஷ்சர்மா உறுதிப்படுத்தியுள்ளார்.

இது இலங்கை அரசாங்கத்துக்கு பெரும் நிம்மதியைக் கொடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

ஏனென்றால், லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கொமன்வெல்த் அமைச்சர்கள் கூட்டத்தில் கொழும்பிலிருந்து மாநாட்டை இடம் மாற்றுவது குறித்து ஆராயப்படவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதுபோலவே இந்த விவகாரம் குறித்து ல்ண்டனில் நடந்த கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் காரசாரமாக வாதிக்கப்பட்டுமுள்ளது.

பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் டிபு முனி தலைமையிலான இந்தக் கூட்டத்தில் கனடா, அவுஸ்திரேலியா, ஜமைக்கா, மாலைதீவு, சியராலியோன், தன்சானியா, ரினிட்டாட் அன் டுபாகோ, வனாட்டு ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் கொமன்வெல்த் மாநாட்டை நடத்துவதற்கு கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயாட் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும் ஏனைய நாடுகளின் ஆதரவை அவரால் பெறமுடியாது போனது.

மேற்குலக அணியில் உள்ள அவுஸ்திரேலியாவே கைவிரித்துவிட்டதால் கனடாவால் எதையும் செய்ய முடியாமல் போய்விட்டது.

எனினும் இந்தக்கூட்டத்தில் பேசப்பட்ட- விவாதிக்கப்பட்ட விடயங்களை வெளியிட முடியாது என்று கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் டிபுமுனி தெரிவித்துள்ளார்.

உச்சிமாநாட்டை நடத்தும் இடம் குறித்து தலைவர்களின் கூட்டத்தில் தான், முடிபு செய்யப்படும் என்றும், அதனைத் தம்மால் மாற்ற முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். இது, லண்டன் கூட்டத்தில் கொமன்வெல்த் மாநாட்டை இடமாற்றம் செய்வது குறித்து கடுமையாக விவாதிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஆனால், மாநாட்டை இடம்மாற்றும் அதிகாரம் தமக்கு இல்லை என்று பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ள கருத்து எந்தளவுக்கு சரியானது என்ற கேள்வி இருக்கிறது. எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தில் கொமன்வெல்த் மாநாட்டை எப்படியும் இலங்கையில் நடத்துவது என்று உறுதியாகியுள்ளமை, இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள வெற்றியாகவே பார்க்கப்படுகிறது.

ஏனென்றால், கொழும்பில் உச்சிமாநாட்டை நடத்துவதற்கு எதிராக மனித உரிமை அமைப்புகள், கொமன்வெல்த் சட்ட அமைப்புகள் போன்றன கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வந்தன. அதைவிட கனேடிய பிரதமர் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இந்தக் கோரிக்கையை விடுத்து வந்துள்ளார்.

அது மட்டுமன்றி அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மல்கம் பிறேசரும் கொழும்பில் மாநாட்டை நடத்துவதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் எதிர்க்கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணிக்க வலியுறுத்தி வருகின்றன.

இப்படிப்பட்ட நிலையில் திட்டமிட்டபடி கொழும்பிலேதான் மாநாடு நடத்தப்படும் என்ற அறிவிப்பு அரசாங்கத்தைப் பெரிதும் நிம்மதி கொள்ள வைக்கும்.

திட்டமிட்டபடி கொழும்பில்தான் கொமன்வெல்த் மாநாடு நடக்கும் என்பது தற்போது உறுதியாகியுள்ள போதிலும், இலங்கை அரசாங்கம் இனிமேலும் நெருக்கடிகளைச் சந்தித்தேயாக வேண்டியிருக்கும்.

ஏனென்றால் கொமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் இருந்து இடம்மாற்ற வேண்டும், மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தற்போதுதான் வலுப்பெற ஆரம்பித்துள்ளன. எனவே, லண்டனில் நடந்த கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக்குழுவின் கூட்டத்தில் கடுமையான நடவடிக்கையில் இருந்து தப்பிவிட்டதாக அரசாங்கம், முழுமையாக நம்ப முடியாது. கொமன்வெல்த் மாநாட்டுக்கு இன்னமும் ஆறரை மாதங்கள் உள்ள நிலையில், அதற்கிடையில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம் என்ற நிலையே உள்ளது.

ஏனென்றால் வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் இன்னொரு கண்டத்தை கடந்தாக வேண்டியுள்ளது. வரும் செப்ரம்பரில் நடக்கவுள்ள 24 ஆவது அமர்வில் ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக என்ற வாய்மூலமான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ளார்.

அந்த அறிக்கையில் ஒன்றும் அவர் இலங்கையைப் புகழ்ந்துரைக்கப் போவதில்லை என்பது தெளிவு. ஏனென்றால் ஜெனீவாத் தீர்மானத்தையே நிராகரித்துவிட்டது இலங்கை.

அதுமட்டுமன்றி, அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவும் அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்பிக்கும் இடைக்கால அறிக்கை ஒருபோதும் இலங்கைக்கு சாதகமானதாக இருக்காது. இது கொமன்வெல்த் மாநாட்டிலும் எதிரொலிக்கும்.

அதைவிட கொமன்வெல்த் மாநாட்டை இடம்மாற்றவும் புறக்கணிக்கவும் கோரும் அழைப்புகள் இன்னும் வலுப்பெறவும் வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, நியுசிலாந்து போன்ற நாடுகளில் இத்தகைய கோரிக்கைகள் வலுப்பெறலாம்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை, கருத்தில் கொள்ளப்படுகிறதோ இல்லையோ- சிலவேளைகளில் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள் இந்த நாடுகளின் முடிவுகளில் தாக்கம் செலுத்தக் கூடும். ஆனால், கொமன்வெல்த் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் தலைவராக உள்ள பங்களாதேஷையும் இன்னொரு முக்கிய நாடான அவுஸ்திரேலியாவையும் இலங்கை தன் கைக்குள போட்டுக் கொண்டது முக்கியமான விடயமே.

கொழும்பில் நடக்கவுள்ள கொமன்வெல்த் உச்சிமாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற அழைப்பை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் நிராகரித்துள்ளார். அதுமட்டுமன்றி, இலங்கையில் மீறல்கள் இன்னமும் தொடர்கின்றன என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் அவர் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மிக அண்மையில் கூட அமெரிக்கா வெளியிட்ட- நாடுகளின் மனிதஉரிமை நிலவரங்கள் பற்றிய அறிக்கையிலும் பிரித்தானிய வெளிவிவகார பணியகம் வெளியிட்ட மனித உரிமைநிலை தொடர்பான அறிக்கையிலும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீண்ட பட்டியலே போடப்பட்டிருந்தது.

ஆனால், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரோ, அப்படி ஏதும் நடப்பதாகத் தெரியவில்லையே என்று கூறியுள்ளார். இதிலிருந்து இலங்கையின் கைக்குள் அவுஸ்திரேலியா அகப்பட்டுக் கொண்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இலங்கையை அவுஸ்திரேலியா பாதுகாத்துக்கொள்ள முனைவதன் அடிப்படையே அகதிகள் விவகாரத்தினால்தான். இலங்கையில் பாதுகாப்பான நிலைஉள்ளதாக கூறியே இலங்கையில் இருந்து வரும் அகதிகளை அவுஸ்திரேலியா திருப்பி அனுப்பி வருகிறது.

மீறல்கள் தொடர்கின்றன என்று ஏற்றுக்கொண்டால் அகதிகளை திருப்பி அனுப்பும் அந்த நாட்டு அரசின் கொள்கை கேள்விக்குள்ளாகிவிடும். இன்னொரு பக்கத்தில் அகதிகள் விவகாரத்தில் இலங்கை அரசிடம் அவுஸ்திரேலியா மாட்டிக்கொண்டுள்ளது என்பதே உண்மை.

இலங்கை அரசாங்கம் நினைத்தால், அகதிகளை அவுஸ்திரேலியாவை நோக்கி பெருக்கெடுக்க வைக்க முடியும். அதைத் தடுப்பதற்கு இலங்கை அரசுடன் பல்வேறு விடயங்களில் அவுஸ்திரேலியா படியிறங்கிப் போகிறது என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

எனவே, கொமன்வெல்த் விவகாரத்தில் இலங்கையைப் பாதுகாக்க அவுஸ்திரேலியா முனைவது ஆச்சரியமான விடயமாக இருக்க முடியாது. அடுத்து பங்களாதேஷ் வெளிவிவகாரச் செயலர் கடந்தவாரம் கொழும்பு வந்திருந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்திருந்தார்.

அப்போதே மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையின் பின்னால் தமது நாடு நிற்கும் என்று அவர் கூறியது கொமன்வெல்த் மாநாட்டை அடிப்படையாக வைத்துத்தான். இப்போது பங்களாதேஷ் இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடாக இல்லை. அது சீனாவின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடாக மாறியுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் இலங்கையின் மிக நெருக்கமான நட்பு நாடான சீனாவும் செல்வாக்குச் செலுத்தியிருக்க வாய்ப்புகள் உள்ளன. அதைவிட பங்களாதேசிடம் இருந்து பெருமளவு மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்ய இலங்கை முன்வந்துள்ளது.

முன்னர் இந்திய நிறுவனங்களிடம் இருந்து வாங்கப்பட்ட மருந்துகளே இனிமேல் பங்களாதேசிடம் வாங்கப்படவுள்ளன. கொமன்வெல்த் மாநாட்டை அடிப்படையாக வைத்தே, இலங்கை இந்த பாரிய மருந்து கொள்வனவு நடவடிக்கைக்கு முன்வந்தது.

இப்படிப் பல்வேறு வழிகளும் காரணங்களும் தான்கொமன்வெல்த் உச்சிமாநாடு விவகாரத்தில் இலங்கைக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளன. இருந்தாலும் இவையெல்லாம் வரும் நவம்பரில் இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு நடப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் போதுமானதா என்பதை இப்போதே உறுதிப்படுத்த முடியாது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமாட்சி வி.க.வை எதிர்த்து உதயசூரிய வி.க. மோதியது

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் காமாட்சி வி.க.எதிர்த்து உடுவில் உதய சுரியன் வி.க. மோதியது.

இப்போட்டியில் நாணயற் சுழற்சியில் வென்ற காமாட்சி வி.க.முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப் பட்ட பந்துப் பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெயரூபன் 17 ஓட்டங்களையும் நிஷாந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கனிஸ்ரன், சஞ்சீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 49 எனும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 45 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகம் சார்பில் வரிங்டன் 23 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் காமாட்சி விளையாட்டுக் கழகம் சார்பில் ஜெயரூபன், அருண் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற தன் மூலம் முதல் அணியாக காமாட்சி விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் ஞான வைரவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 20 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் ஞான வைரவர் அணி சார்பில் றெனோசன் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

21 எனும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய ஞான வைரவர் விளையாட்டுக்கழக அணி 4 இலக்குகளால் போட்டியில் வெற்றியீட்டியது. நிறோஷன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இதன்மூலம் இறுதிப் போட்டிக்கான மற்றைய அணியாக ஞான வைரவர் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றது. (அ-3-23)

# நோயாளர்களைப் பார்வையிட இருவழிப்பாதை அனுமதி

## போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் நன்மை கருதி வைத்தியசாலைக்குள் உட்செல்ல, வெளிச் செல்ல இருவழிப்பாதையினை பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வரும் பார்வையாளரின் நன்மை கருதி 01.04.2013 அன்று நடைமுறைக்கு வரும் வண்ணம் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் உள்நுழையும் வெளிச் செல்லும் பாதைகளாக இருவழிப் பாதைகளைப் பன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பார்வை நேரங்களில் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கருகில் உள்ள வைத்தியசாலை வீதியிலுள்ள உள்நுழையும் வெளிசெல்லும் வாசல்களையும் விக்டோரியா வீதியுள்ள உள்நுழையும் வெளிச்செல்லும் வாசல்களையும் பாவிக்க முடியும். அதாவது பஸ்களில் வரும் பார்வையாளர்கள் பஸ்தரிப்பிடத்தில் இறங்கி வெளிநோயாளர் பிரிவுக்கண்மையிலுள்ள வாசலாலும் தனிப்பட்ட வாகனங்களில் வருவோர் விக்டோரியா வீதியில் உள்ள வாசலாலும் இலகுவாக வந்து யாழ். பேதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களைப் பார்வையிட முடியும் என பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




- ✱ 1568-ஸ்கொட்லாந்தில் லொக் லெவென் அரண்மனையில் சிறை வைக்கப் பட்டிருந்த முதலாம் மேரி அங்கிருந்து தப்பி வெளியேறினாள்.
- ✱ 1808-மாட்ரிட் மக்கள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- ✱ 1814-முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் தமது மதத்தைப் பரப்புவதற்காக கப்பலில் லண்டனில் இருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.
- ✱ 1876-பல்கேரியாவில் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- ✱ 1885-புல்ஜிய மன்னர் இரண்டாம் லெயொபோல்ட் கொங்கோ சுதந்திர நாட்டை அமைத்தான்.
- ✱ 1889-எதியோப்பியாவின் அரசன் இரண்டாம் மெனெலிக் என்பவன் இத்தாலியுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையின் படி எரித்திரியாவின் முழுப் பகுதியும் இத்தாலிக்குத் தரப்பட்டது.
- ✱ 1928-அமெரிக்காவின் பிரபல கேலிச் சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கேலிச்சித்திரக் கதாபாத்திரமான மிக்கி எலியின் படத்தினை வரைந்தார்.
- ✱ 1933-ஹிட்லர் தொழிற்சங்கங்களைத் தடை செய்தார்.
- ✱ 1945-இரண்டாம் உலகப் போர்: பேர்லினைத் தாம் கைப்பற்றியதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது. ஜேர்மனியப் படைகள் இத்தாலியில் சரணடைந்தன.
- ✱ 1952- உலகின் முதலாவது போர் விமானம் டி ஹாவிலண்ட் கொமெட் 1 முதற்தடவையாக லண்டனுக்கும் ஜொகனஸ்பேர்க் நகருக்கும் இடையில் பறந்தது.
- ✱ 1964-வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கக் கப்பல் ஒன்று குண்டுவெடிப்பில் மூழ்கியது.
- ✱ 1964- 8 ஆயிரத்து27 மீற்றர் உயர ஷிஷபங்குமா மலையின் உச்சியை சீனாவின் இரு மலையேறிகள் எட்டினர்.
- ✱ 1982-போக்லாந்து போர்: பிரித்தானியாவின் எச்.எம்.எஸ். கொன்கரர் என்ற நீர்மூழ்கிக் கப்பல் ஆர்ஜெண்டீனாவின் போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- ✱ 2002-கேரளாவில் பாலக்காடு நகரில் இடம்பெற்ற கலவரங்களில் 8 இந்துக்கள் பலியாகினர்.
- ✱ 2004- நைஜீரியாவில் கிறிஸ்தவர்களுக்கிடையில் நடந்த கலவ்ரத்தில் 630 பேர் பலியாகினர்.
- ✱ 2006-குஜராத் மாவட்டத்தில் மசூதி ஒன்று இடிக்கப்பட்டதை அடுத்து இடம்பெற்ற கலகத்தில் 5 பேர் பலியாகினர்.

### பிறப்புக்கள்

- ✱ 1921-சத்யஜித் ராய், இந்தியத் திரைப்பட இயக்குநர் (இ.1992)
- ✱ **1969-பிறயன் லாறா, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாளர்**
- ✱ 1975-டேவிட் பெக்காம், இங்கிலாந்து காற்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

- ✱ 1519-லியனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர் (பி.1452)
- ✱ 2009-கே.பாலாஜி, தமிழ்த் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்

### பிறயன் லாறா



பிறயன் லாறா மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முக்கியமான துடுப்பாட்டக்காரரான இவர், 1969 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அன்று டிரினிடாட்டில் பிறந்ததார் லாறா ஓர் இடதுகைத் துடுப்பாட்ட வீரர்.

1990- இல் சர்வதேச அளவில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக தெரிவு செய்யப்பட்ட லாறா 1993 இல் சிட்னியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் 277 ஓட்டங்களைப் பெற்றார். அந்த வகையில் இவரது முதல் சதமே ஓர் இரட்டைச் சதமாக அமைந்தது.

ஓர் இன்னிங்சில் அதிசவடிய ஓட்டங்களைப் பெற்ற சாதனையாளர் லாறாவேயாகும். இவர் ஓர் இன்னிங்சில் 400 ஓட்டங்களைப் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர் என்ற சாதனையை மீட்டவர் என்ற பெருமையும் லாறாவையே சாரும்.

அவுஸ்திரேலியாவின் மத்தியூ எய்டன் பெற்ற 380 ஓட்டங்கள் இவரது முந்தைய சாதனையான 375 ஓட்டங்களை வீழ்த்தியது எனினும் பின்பு 400 ஓட்டங்களைப் பெற்று இழந்த தன் சாதனையை மீட்டார் லாறா.

## யாழ்.போதனா வைத்தியசாலையின்

# பிரசவ விடுதிக்கு பார்வையாளரை மட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளில் பார்வையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் விடுதிகளில் பிறக்கும் சிசுக்களில் கணிசமான அளவு சிசுக்களுக்கு தொற்றும் நோய்கள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து இம்மட்டுப்படுத்தல் நடைமுறைபடுத்தப்படுகின்றது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வேறு சில வைத்தியசாலைகளில் இவ்வகையில் அதிகரித்த அளவில் சிசுக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்பட்டு வந்ததைத் தொடர்ந்து பார்வையாளர் அனுமதியில் கட்டுப்பாடுகளை அமுல்படுத்திய போது தொற்று நோய்கள் குறிப்பிடத்தக்களவு குறைந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதே நிலைமை வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 2012 இல் ஏற்பட்டபோது பார்வையாளாரைக் கட்டுப்படுத்தியதன் மூலம் பெருமளவு சிசுக்கள் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

சிறுவர்களைஒருபோதும் நோயாளரைப் பார்வையிடுவதற் காக வைத்தியசாலைக்கு அழைத் துவராதீர்கள். உங்கள் குழந்தைகளைக் தொற்று நோய்களின் தாக் கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

பிரசவ விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளிக்கு இரு பார்வையாளர்கள் மட்டுமே (பாஸ்) அனுமதிப்பத்திரத்துடன் அனு மதிக்கப்படுவர்.

உறவினர், நண்பர்களின் சிசுக்களுக்கு தொற்று ஏற்படுவதை நீங்களும் விரும்பமாட்டீர்கள் அல்லவா? பிரசவ விடுதிகளுக்கான உங்கள் வருகையை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-1)

# நாட்டுக் கூத்து போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியின் ஓர் அங்கமாகிய நாட்டுக்கூத்தின் மாகாண மட்டத்திற்கான போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதில் சகல நாட்டுக் கூத்துப் போட்டிகளும் நடைபெறவுள்ளதாகவும் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள பாடசாலைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தந்து தங்கள் வரவுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.(அ-3-15)

## கிளி. கல்வி வலயத்தில் 102 ஆவது பாடசாலை நேற்று முன்தினம் திறப்பு

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வலயத்தின் 102 ஆவது பாடசாலையான முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போர் நடவடிக்கை காரணமாக மூடப்பட்டு கடந்த ஏழு வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் புதிய இடத்தில் ஆரம்பமாகியுள்ளது. இப்பாடசாலை முன்பு இயங்கிய இடமானது கண்ணிவெடி முற்றாக அகற்றும் பணி முடிவடையாத நிலையில் உள்ளதாக இப்பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்தனர். (அ-2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்திய படை எல்லையிலிருந்து வெளியேறிச் செல்லவேண்டும்

## சீனாவின் அறிவிப்பால் அதிர்ச்சியில் இந்தியா

(புதுடில்லி)

**இந்திய-சீன இராணுவ உயர் அதிகாரிகள் இடையேயான 3 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. இதன்போது புக்சி மற்றும் லடாக்கின் சுமர் பகுதியில் உள்ள இந்திய பாதுகாப்பு படைகளை திரும்பப் பெற வேண்டும் என சீனா வலியுறுத்தி உள்ளது.**

**இந்திய எல்லைப் பகுதியில் இருக்கும் இந்திய பாதுகாப்பு படைகளை திரும்பப் பெறுமாறு சீனா வலியுறுத்தி இருப்பது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.**



***சல்மான் குர்ஷித் தகவல்:***

இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தை திருப்தி அளிக்கவில்லை என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான குர்ஷித் தெரிவித்துள்ளார்.

மேதின விழாவில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவுடனான பேச்சுவார்த்தையில் சீனா தரப்பில் இருந்து எதிர்பார்த்த முடிவு எட்டப்படவில்லை. இந்தியப் படைகளைத் திரும்பப் பெறுமாறு அவர்கள் கோரிக்கை மூலம் வலியுறுத்தியுள்ளனர். நாங்கள் சில கோரிக்கைகளைத் தெரிவித்துள்ளளோம். அவர்களும் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இவ்வாறு குர்ஷித் தெரிவித்துள்ளார்.

***சீனா கோரிக்கை:***

புக்சி மற்றும் சுமர் உள்ளிட்ட எல்லைப் பகுதிகளில் இந்தியா தனது எல்லை பாதுகாப்பு கட்டமைப்புக்களை மாற்றி அமைக்க வேண்டும். சீனப் படைகளை நோக்கிய இந்தியர்கள் அமைத்துள்ள கூடாரங்களைக் காலிசெய்ய வேண்டும். அவ்வாறு இந்தியர்கள் தங்களின் கோரிக்கைகளை நிறைவு செய்த பின், சீனா தனது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து யோசனை செய்யும் என சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

இருப்பினும் படைகளை திரும்பப் பெறுவது தொடர்பான எந்த ஒரு வாக்குறுதியையும் பேச்சுவார்த்தையின் போது சீனா வழங்கவில்லை.

***ஐடிபிபி தகவல்:***

இந்தியா தனது படைகளைத் திரும்பப் பெற்று அப்பகுதியில் உலோகத் தகடுகளால் மட்டுமே பாதுகாப்பு எல்லைகளை அமைக்க வேண்டும் என சீனா விரும்புவதாக இந்திய- திபெத்திய எல்லை பாதுகாப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் அதனைப் பயன்படுத்தி சீனா தனது படைகளை அப்பகுதியில் ரோந்து வரச் செய்யவும் திட்டமிட்டுள்ளதாகவும் எல்லை பகுதியில் இந்தியா அதிகளவில் படைகளைக் குவித்து வருவதை அறிந்து அவற்றைத் திரும்பப் பெறவைத்து அதனை தனக்கு சாதகமாக பயன்



படுத்தவும் சீனா திட்டமிட்டுள்ளதாகவும் ஐடிபிபி தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீனா தனது படைகளை திரும்பப் பெறுவதை உறுதி செய்யாமல் இந்தியாவும் தனது எல்லை பாதுகாப்பு கட்டமைப்பை மாற்றத் தயாராக இல்லை எனவும் ஐடிபிபி தெரிவித்துள்ளது.

***சீன படைகள் தகவல்:***

இந்நிலையில் பீஜிங்கிலில் இருந்து வரும் உத்தரவிற்காக காத்திருப்பதாக சீன இராணுவத்தினர் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

சீன படைகள் ஊடுருவல் சாதாரண பிரச்சினை எனவும் அவற்றைத் தீர்க்க அரசு திட்டமிட்டு வருவதாகவும் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இது சீன படைகளுக்கு பதிலடி கொடுப்பதை இந்தியா தவிர்த்து வருவதை காட்டுவதாகவுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய இராணுவம் மற்றும் ஐடிபிபி அதிகாரிகள் இந்திய எல்லையைக் கடந்து சென்று இருநாட்டு படையினரும் பரஸ்பரம் நல்லுறவைப் பகிர்ந்து கொள்ளும் மேதினம் நேற்று நடைபெற்றுள்ளது.

இதனால் மீண்டும் பேச்சுவார்த்த நடத்த வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்திய எல்லைக்குள் அமைத்த கூடாரத்தை அகற்ற சீனா மறுத்துள்ளமையால் அது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் எதிர்வரும் 9ஆம் திகதி சீனா செல்லும் பயணத்திலும் சீன பிரதமரின்20ஆம் திகதியிலான இந்திய பயணத்திலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2-5)

# பொதுநலவாய மாநாட்டை தடுக்க கோருகிறது பாரதிய ஜனதா கட்சி

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடைபெறாமல் தடுப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தமிழகம் புதுச்சேரியைச் சேர்ந்த 40 எம்.பிக்களும் இராஜினாமா செய்ய வேண்டும் என்று தமிழக பா.ஜ.க வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் மத்திய அரசு புறக்கணித்து வருவது வருத்தம் அளிக்கிறது.

பொதுநலவாய (கொமன்வெல்தி நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்த தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆனா




லும் இலங்கையில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக செய்திகள் வருகின்றன.

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கையில் மாநாடு நடத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

எனவே, தமிழகம் புதுச்சேரியை சேர்ந்த 40 மக்களவை உறுப்பினர்களும் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறாமல் தடுக்குமாறு வலியுறுத்த வேண் டும்.

இதனை பிரதமர் ஏற்கவில்லை என்றால் 40 பாராளுமன்ற உறுப்பினர்களும் இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# ஜம்மு-காஷ்மீர் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவல்

ஜம்மு வழியாக 200 பயங்கரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவ திட்டமிட்டு தயார் நிலையில் இருப்பதாக இராணுவம் திடுக்கிடும் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே சீன இராணுவத்தினர் அத்துமீறி முகாமிட்டுள்ள நிலையில் தற்போது பயங்கரவாதிகளின் ஊடுருவல் திட்டம் இராணுவத்தை உஷார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஜம்மு-காஷ்மீர் பகுதியின் ஜெனறல் அலுவலர் கமாண்டிங் படைப்பிரிவின் லெப்டினட் ஜெனரல் பி.எஸ்.ஹுடா கூறுகையில்,

அயல் நாடான பாகிஸ்தானில் எதிர்வரும் 11ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி அந்நாடு தங்களது எல்லைப் பகுதியினை சீல் வைத்து பாதுகாத்துள்ளது. ஏற்கனவே இந்தியா-பாகிஸ்தான் எல்லையை யொட்டியுள்ள ஜம்மு-காஷ்மீர் எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் 20 தொடக்கம் 30 பயங்கரவாதிகள் முகாமிட்டு இந்திய எல்லைக்குள் ஊடுருவ திட்டமிட்டிருந்தனர். இதனை தக்க சமயத்தில் முறியடித்தோம்.

எனினும் 200இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் ஜம்மு-காஷ்மீர் வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவ திட்டமிட்டு தயார் நிலையில் உள்ளனர். இதனை தடுக்க பரந்தளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் தெரிவித்தார். (அ-2)

# இந்திய -அமெரிக்க உறவில் முன்னேற்றம்

இந்திய - அமெரிக்க உறவில் நவீன முன்னேற்றங்கள் காரணமாக தொழில்நுட்பத்துறை எதிர்



வரும் காலங்களில் வலுவானதாக அமையும் என அமெரிக்காவுக்கான இந்திய தூதர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஹெரிடேஜ் அறக்கட்டளை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிருபமா ராவ் கூறுகையில்,

இந்திய-அமெரிக்க உறவு பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வமாக உள்ளது. இரு நாட்டு வர்த்தகத் தொடர்பு எதிர்காலத்தில் வலுப்பட தொழில்நுட்ப வளர்ச்சிதான் முக்கிய காரணமாக விளங்கும் .

அமெரிக்கா இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்யும் பட்சத்தில் இந்தத் துறைகளில் இந்தியா மேலும் வளர்ச்சியடையும். இது குறித்து இரு நாட்டு தலைவர்களும் அடுத்த சில மாதங்களில் சந்தித்துப் பேசவுள்ளனர். அப்போது இந்தியாவுக்கு இயற்கை எரிவாயு ஏற்றுமதி செய்வது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாக வாய்ப்புள்ளது என்று கூறினார். (அ-2)

## வட இந்தியாவில் நிலநடுக்கம் மாணவர்கள் காயம்

(புதுடில்லி)

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர், இமாச்சல பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவாகியுள்ளது.

நில நடுக்கத்தினால் டில்லியில் உள்ளிட்ட வட மாநிலங்களில் கட்டடங்கள் அதிர்ந்துள்ளன. இதனை அடுத்து மக்கள் வீதிகளுக்கு ஓடி வந்துள்ளனர்.

இந்நிலையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பாதவர்வாக் என்ற இடத்தில் நிலநடுக்கத்தினால் பாடசாலையின் கூரை இடிந்து விழுந்துள்ளது. இதில் இருந்த 8 மாணவிகள் மற்றும் 4 மாணவர்கள் காயம் அடைந்துள்ளனர். (அ-2)




மேதினத்தை முன்னிட்டு சென்னை பெண்கள் விடுதலை முன்னணியை சேர்ந்தவர்கள் பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் விமானம் மீது ஏவுகணைத் தாக்குதல்

ரஷ்ய பயணிகள் விமானத்தை இலக்கு வைத்து ஏவுகணைத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டபோதும்விமானியின் சாதுாரியத்தால் பயணிகள் உயிர் பிழைத்த சம்பவம் சிரிய வான்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

பயணிகள் மயிர் கூடச் செறிய வைத்த இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

ரஷ்ய நாட்டுக்கு சொந்தமான தனியார் பயணிகள் விமானம் சுமார் 200 பயணிகளுடன் நேற்று முன்தினம் எகிப்தில் இருந்து ரஷ்யா திரும்பிக் கொண்டிருந்தது.


சிரிய நாட்டின் வான் எல்லைக்குள் அந்த விமா னம் நுழைந்த போது மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்த 2 ஏவுக ணைகள் விமானத்தைத்தாக்க முற்பட்டுள்ளன.

ஏவுகணைகள் விரட்டுவதை அறிந்து கொண்ட விமானி இலாவகமாக விமானத்தை பக்கவாட்டில் ஒதுக்கி செலுத்தியுள்ளார். இதன் காரணமாக குறி தவறிய இரு ஏவுகணைகளும் விமானத்தின் மீது மோதாமல் கடந்து சென்றன. இதனால் விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளனர்.

சிரியாவில் நடைபெற்று வரும் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு ரஷ்ய அரசு ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்நிலை யில் ஜனாதிபதிக்கு எதிராக போராடி வரும் புரட்சியாளர்கள் இந்த ஏவுகணைத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என கருதப்படுகிறது. (அ-5)

# சர்வதேச விண்வெளி சூரிய தகட்டில் ஓட்டை

## விஞ்ஞானிகள் கருத்து



அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பலநாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை அமைத்து கடந்த 1998 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தின.

பூமியில் இருந்து சுமார் 370 கிலோ மீற்றர் தெலைவில் சுற்றுவட்டத்தில் சுற்றி வருகின்ற இந்த விண்வெளி நிலையம் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சூரிய ஒளி தகட்டில் ஓட்டை விழுந்திருப்பதாக கனடா விண்வெளி வீரர் கிறிஸ் ஹாட்பீல்டு கூறி யுள்ளார்.

சமீபத்தில் விண்வெளிமையத்தை சுற்றி விண்வெளி நடை (ஸ்பேஸ் வாக்) மேற் கொண்ட போது இந்த ஓட்டையைக் கண் பிடித்ததாக அவர் தனது டு விட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் ஓட்டை விழுந்த இடத்தை புகைப் படம் எடுத்தும் வெளியிட்டுள்ளார்.

விண்ணில் சுற்றி வருகின்ற எரிகல் மோதி யதால் இந்த ஓட்டை விழுந்திருக்கலாம் என் றும் முக்கிய பாகங்களில் எரிகல் ஊடுருவியிருக்க முடியாது எனவும் விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

விண் கற்களால் இந்த ஓட்டை ஏற்பட அதிக வாய்ப்பு இல்லை என்றும் மனிதர்களால் கைவிடப்பட்ட விண்வெளி குப்பைகளால் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் அரிசோனா பல்கலைக்கழக கோள்கள் ஆராய்ச்சியாளர் ஜிம் ஸ்காட்டி தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆயுள் முழுவதும் தேர்தலில் போட்டியிட முஷாரப்பிற்குத் தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிட தடை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பை வழங்கியுள்ளது.

**குற்றச்சாட்டுக்கள்:** பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் மீது கடந்த 2007 ஆம் ஆண்டில் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்தியது பாகிஸ்தான் அரசு. பெனாசிர் பூட்டோவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கா மையால் அவர் கொல்லப்பட்டமை சட்டத்துக்கு புறம்பாக 60நீதிபதிகளை பதவி நீக்கம் செய்து சிறையில் அடைத்தது, 2006 ஆம் ஆண்டில் இராணுவத் தாக்குதலில் பஜோக் இயக்கத் தலைவர் அக்பர் பக்தி கொல்லப்பட்டது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

கடந்த 4 ஆண்டுகள் வெளிநாட்டில் தங்கி இருந்த 69 வயது முஷாரப் தற்போது நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சமீபத்தில் பாகிஸ்தானுக்கு திரும்பினார். 4 பாராளுமன்ற தொகுதிகளில் போட்டியிட தாக்கல் செய்த அவரது மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன.

**சிறையில் முஷாரப்:** வேட்பு மனுக்கள் தள்ளுபடியை எதிர்த்து முஷாரப் சார்பில் பெஷாவர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடந்தது. தலைமை நீதிபதி முஹமது கான் தலைமையிலான 4 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் விசாரணை நடத்தியது.

**வாழ்நாள் தடை:** மேல் முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த தலைமை நீதிபதி முஹமதுகான், முஷாரப் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிட தடை விதித்து தீர்ப்பு கூறினார்.

பாகிஸ்தானில் 2 முறை தேர்தல் நடத்த தடை விதித்ததற்கும் 2007 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின் போது நீதிபதிகள் சிறை வைக்கப் பட்டமைக்காகவும் இந்த தடை விதிக்கப்படுவதாக தலைமை நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார். (அ-2)

# பாக். ஜனநாயக ஆட்சிமுறையை முடிபுக்கு கொண்டு வருவோம்

## தலிபான்கள் எச்சரிக்கை

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி முறையை முடிபுக்கு கொண்டு வரப் போராடுவோம் என தெஹ்ரிக் இதலிபான் பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹக்கிமுல்லா மாஸித் கூறியுள்ளார்.

எதிர்வரும் மே 11 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் தலிபான் பயங்கரவாதிகள் தேர்தல் பிரசாரம் செய்யும் அரசியல் தலைவர்களைக் குறி வைத்து தாக்கி வருகின்றனர்.

இந்நிலையில் தலிபான் அமைப்பு சார்பில் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது, தலிபான் அமைப்பின் முக்கிய நோக்கமே பாகிஸ்தானில் ஜனநாயகத்தை முடிபுக்கு கொண்டு வர வேண்டும் என்பதுதான்.

இதன் ஒரு பகுதியாகத் தான் தேர்தல் நடைமுறையைக் குலைக்கும் வகையில் எங்கள் அமைப்பினர் கட்சித் தலைவர்களைக் குறி வைத்து தாக்கி வருகின்றனர்.

அரசு எங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளதன் மூலம் எங்கள் அமைப்புக்கு ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கட்சி அவாமி தேசிய கட்சி, எம். கியு. எம் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மீது தலிபான்கள் நடத்தியுள்ள தாக்குதல்களில் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால்தேர்தல்பிரசாரகூட்டங்கள், பேரணிகளில் மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பதைத் தவிர்த்து வருகின்றனர். (அ-2)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் 5 கடைகளை உடைத்து திருட முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலுள்ள 5 கடைகளில் ஒரே இரவில் திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளது.

இப் பெரும் திருட்டு முயற்சியினால் வர்த்தகர்களிடையே சற்று பய உணர்வு பீடித்திருந்தது.

இத்திருட்டு முயற்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஸ்ரான்லி வீதியிலிருந்து யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு செல்லும் குறுக்கு வீதியான பழைய தபால் கந்தோர் வீதியிலுள்ள 3 மாடிக் கட்டடத்தில் தொடராக அமைந்துள்ள இலத்திரனியல் உதிரிப்பாக வர்த்தக நிறுவனங்களிலேயே மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இந்த 5 தொடர் கடைகளில் இலத்திரனியல் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம்,



இலத்திரனியல் சாதனங்கள், திருத்த வேலை நிலையம், தொலைபேசி தொடர்பு நிறுவனம் என்பன அமைந்துள்ளன.

இவ் வர்த்தக நிறுவனங்களில் பல இலட்சம் பெறுமதி மிக்க இலத்திரனியல் உபகரணங்கள், சாதனங்கள், பொருட்கள் என்பன காணப்பட்ட போதிலும் எவையும் திருட்டுப் போகவில்லை என கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அனைத்து கடைகளின் முன் பக்க பூட்டுக்கள் திருடர்களினால் உடைக்கப்பட்டு கடைக்குள்ளே செல்ல முயற்சிக்கப்பட்டு எடுக்கப் பட்டுள்ளது.

எனினும் சுருக்கு கதவுகளிற்கு பின்புறமாக போடப்பட்டுள்ள இரும்பு பட்டத்தினால் திருடர்கள் உள் நுழைய முடியாமல் போய்விட்டது. இதனால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் திருட்டுப் போகாமல் தப்பித்தன.

தான் தனது கடையை இரவு 7.30 மணிக்கு பூட்டி விட்டு வீட்டுக்குச் சென்ற பின்னரே இத்திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என கடை உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


சம்பவ இடத்திற்கு நேற்றுக்காலை புதன்கிழமை நேரில் சென்ற பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டதோடுதடயப்பொருட்களினை ஆராய்ந்து சென்றனர். (அ-4-6)

# நீதியான அரசியல் தீர்வு கிடைக்க பொது வாக்கெடுப்பு நடத்துக

## செந்தமிழன் சீமான் கோரிக்கை

ஈழத் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க ஈழத் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் நடைபெற்ற தமிழர் எழுச்சி பொதுக் கூட்டத்தில்



கலந்து கொள்ள வந்திருந்த அவர் முன்னதாக செய்தியாளர்களை சந்தித்துள்ளார்.

தமிழர்களுக்கு கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க இந்தியா அனுப்பிய நிதி உதவியைக் கொண்டு இலங்கை அரசு சிங்களவர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கிறது.

மேலும் ஈழத்தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க பொதுவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

# தொழிலாளர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

## தொழிலமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

ஒப்பந்த அடிப்படை ஊழியர்களின் தொழில் உரிமையாளர்களையும் தொழில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அவர்களை நிரந்தரமாக்குவது தொடர்பிலான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக தொழிலமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் தொழில் வழங்கும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் சிறந்த தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச துறையைப் போன்று தனியார் துறையினரின் ஓய்வு பெறும் வயதெல்லையும் 60 ஆக அதிகரிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசாங்கம் தொழில் உரிமை மற்றும் தொழில் பாதுகாப்பை சகலருக்கும் வழங்கியுள்ளது.

குறிப்பாக தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள 35 வீத மின்சார அதிகரிப்புடன் ஒப்பிடும்போது ஊழியர்களின் சம்பளம் மிகக் குறைவே. எனினும் பேச்சுவார்த்தை மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய நிலை தற்போதுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பிரச்சினையாகவோ அல்லது வேறு எந்த தொழிலாளர்கள் பிரச்சினையாகவோ இருந்தாலும் அவைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே அவைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

தற்போது மின்சார பிரச்சினை சற்று உக்கிரமடைந்துள்ளது. அது சம்பந்தமாக நிவாரணம் ஒன்றை வழங்குவது பற்றி ஆலோசிக்கப் பட்டு வருகின்றது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கலாசாரமொன்று இப்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் அல்லது ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கென தொழிலமைச்சில் ஒரு தனியான பிரிவு உள்ளது.

இதன் மூலம் இரண்டு தரப்பினரும் வெற்றி பெறும்படியான தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)


# உணவு ஒவ்வாமையினால் 24 பேர் வைத்தியசாலையில்

றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் 24 பேர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உட்கொண்ட உணவு ஒவ்வாமையினாலேயே இம் மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று காலை உணவாக பருப்பு, வாழைப்பூ சுண்டலுடன் சோறு உணவாக உட்கொண்டதிலேயே இவர்களுக்கு வயிற்று வலி ஏற்பட்டு இந்த ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

# மரண அறிவித்தல்கள்



## கந்தையா தர்மலிங்கம்

(Retired Chartered Accountant - FCA)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் Bodiam St Fillans Road, London ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் 29-04-2013 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா மற்றும் இளையப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், முத்தம்மா அவர்களின் அன்புக் கணவரும், உமாதேவி, ராஜகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நடராசா, நவரட்ணம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், ராஜேஸ்வரன், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காயத்திரி, தியாஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.05.2013 சனிக்கிழமை அன்று லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:-
0044 208 695 5685 (சி-3175)



## நாகம்மா தம்பையா (மணி)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா தம்பையா (மணி) அவர்கள் 30.04.2013 செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி எய்தினார்.


இவர் காலஞ் சென்றவர்களான விசுவலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரை, விசுவலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற இளையதம்பி தம்பையாவின் அன்பு மனைவியும் நாச்சிமார் கோவிலடி இராஜன் (ஜேர்மனி), தவராசா, கிருஸ்ணமூர்த்தி, லீலாவதி (பிரான்ஸ்), நவீந்திரராசா, கணேசமூர்த்தி (பிரான்ஸ்), கருணாவதி (ஜேர்மனி), கருணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 05.05.2013 ஞாயிற்றுக் கிழமை அன்று அவரது இல்லத்தில் இறுதிக் கிரிகைகள் நடைபெற்று பின்னர் நாச்சிமார் கோவிலடி கோம்மையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மருமக்கள் - பேரப்பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:-
0049 421 809 4418 (சி-3173)



## கதிரவேலு சுப்பிரமணியம் (ராசு)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Mulheim என்ற இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சுப்பிரமணியம் அவர்கள் 28.04.2013 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற கதிரவேலு, அன்னம்மா அவர்களின் மகனும், காலஞ்சென்ற தாமோதரப்பிள்ளை, இராசம்மா அவர்களின் அன்பு மருமகனும், ரேவதி (ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும், ரோகினியம்மா (வல்வெட்டி), அன்னராணி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரரும், கமலதாசன் (கனடா), நிஷாந்தி (லண்டன்), நிறோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மணியம் (வல்வெட்டி), காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கதிரேசு ஆகியோரின் மருமகனும், ராஜா (விதானை-லண்டன்), காலஞ்சென்ற சின்னத்தம்பி, நல்லம்மா (வல்வெட்டி) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சிவம், இராஜலிங்கம் (கனடா), ஞானபூபதி (லண்டன்), விஜயராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், இராஜசிங்கம் (லண்டன்), நித்தியானந்தம் (லண்டன்), கமலாதேவி (கனடா), சிவம் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும்.

ரமேஸ்வரன் (கனடா), ராஜேஸ்வரன் (கனடா), செல்வரூபி (கனடா), ராஜ்குமார் (கனடா), சிந்துரூபி (கனடா), ஆனந்தன் (லண்டன்), நிகேதன் (லண்டன்), சுதாகரன் (ஜேர்மனி), சங்கர் (லண்டன்), இந்துமதி (லண்டன்), சுபா (லண்டன்), சிவாஜினி (கனடா), ராஜினி (லண்டன்), கரண் (கனடா), தர்சினி ஆகியோரின் மாமானாரும்.

கௌசிகன்(லண்டன்), கௌந்தின்(லண்டன்), சந்திரன்(கனடா), லிங்கேஸ்வரன் (லண்டன்), கஜந்தன் (லண்டன்), நிர்மினி (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், நிந்துயா (லண்டன்), அம்றதா (ஜேர்மனி), அம்ருதா (ஜேர்மனி), தக்ஷிகா (லண்டன்), அக்ஷிகா (ஜேர்மனி), மிதுஷா (லண்டன்), ரிஷான் (கனடா), அஸ்வின் (கனடா), றிதன் (கனடா), சைலன் (கனடா), பிரகன் (கனடா), சஞ்ஜித் (லண்டன்), நிஷாந்த் (லண்டன்), சஹானா (லண்டன்), கபினாஸ் (லண்டன்), மிதுஷன் (லண்டன்), வினுஜா (லண்டன்), பிரவின் (லண்டன்), அஸ்வினி (கனடா), அஞ்சனன் (கனடா), டெவின் (கனடா), தனுசன் (கனடா), அனுஷன் (கனடா), வஸ்மிகர், சிவக்சன், கன்சிகா, பிரித்திகா (லண்டன்), கிருத்திஷ் (லண்டன்), கனிஷ்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொடர்புகளுக்கு:-
0049 208 469 21331 (சி-3174)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampuriijaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தத்துவங்களை எப்போது பேசுகிறான்?

பிறரைப் பற்றி நினைக்கும்போது.

-எமர்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மயக்கமா! தயக்கமா! தமிழ் அரசியலில் குழப்பமா?

இம்முறை மே தினக் கொண்டாட்டங்கள் யாழ்ப்பாணத்தில் வெறிச்சோடிப் போயின. முக்கிய தமிழ்க் கட்சிகள், யாழ்ப்பாணத்தைக் கைவிடும் அளவுக்கு என்ன நடந்தாயிற்று என்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் களை கட்டிய மே தினக் கொண்டாட்டங்கள் இம்முறை வன்னிப் பிரதேசத்தை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன கிளிநொச்சியில் இம்முறை மே தினக் கொண்டாட்டத்தை நடத்தியுள்ளன.

நடைபெறப்போகும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வன்னி மக்களின் வாக்குகள் பெறுமதியானவை. எனவே வன்னிப் பிரதேசத்தில் தேர்தல் வியூகம் அமைப்பது கட்டாயமானதென்ற அடிப்படையில், மே தினக் கொண்டாட்டங்கள் தேர்தல் வியூகத்துக்கான அடித்தளமாக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வர முடியும்.

ஒருபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அணியும் மறுபுறத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அணியும் வன்னி வாழ் மக்களை தம் பக்கம் வைத்திருப்பதில் களமிறங்கியுள்ளன.

இதில் வன்னி மக்களின் நாடித்துடிப்பை அறிவதற்கான ஒரு சந்தர்ப்பமாக மே தின நிகழ்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

வன்னியில் களமிறங்கி மே தின நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதென்பதும் யாழ்ப்பாணத்தில் மே தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறாமையும் ஒரு பெரும் உண்மையை உணர்த்தி நிற்கின்றது.

அதாவது யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வுகளை நடத்துவதாயின் அதற்கான ஆட்களைத் திரட்டுவதென்பது மகா கடினமான விடயம்.

யாழ்ப்பாண மக்கள் அரசியலை - அரசியல்வாதிகளை நம்புவதற்குத் தயாரில்லை. எனவே தான் யாழ்ப்பாண மக்கள் ஒதுங்கிக் கொள்கிறார்கள். இவ்வாறான இடங்களில் மே தினக் கொண்டாட்டங்களை நடத்துவது அரசியல் கட்சிகளுக்கு தேவையற்ற மனக் கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பது பொது நினைப்பு.

இதன் காரணமாக வன்னி நோக்கி மே தினக் கூட்டங்கள் நகர்த்தப்பட்டுள்ளன. இந்த நகர்வு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மிகப் பிரமாண்டமாகக் காட்சி தரும் என நம்பலாம்.

எதுவாயினும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் உள்ளடக்கியதான அரசியல் வியூகம் அமைப்பதைத் தவிர்ப்பதும்,

எங்கெங்கு அரசியல் ஆர்வம் அல்லது அதற்கான சந்தர்ப்பம் உள்ளதோ! அதனை மட்டும் பயன்படுத்த நினைப்பதும்,

தமிழ் மக்களின் எதிர்கால அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல.

இத்தகைய நிலைமைகள் மிகக் குறைந்தளவான மக்களின் வாக்குகளுடன் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறும் முயற்சியாகும்

இஃது தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழ் மக்களையும் இடைவிலகச் செய்யும் ஆபத்தை தோற்றுவிக்கும் என்பதோடு,

அரசியல் - அரசியல்வாதிகள் என்ற சொற்பதங்கள் வெறுப்புக்குரியதாகவும் தமிழ் மக்களின் மனங்களில் பதிவாகிக் கொள்ளும்.

## லெனினிச கட்சி ஏற்பாட்டில் யாழில் மே தின ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலம் நேற்று அக்கட்சியின் வட பிராந்திய செயலாளர் தோழர் க.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் சைக்கிள் பேரணி யாழ் நகரினை பி.ப 4.30 மணியளவில் வந்தடைந்தது.

ஊர்வலத்தின் இறுதியில் யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் கூட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

இவ் ஊர்வலத்தின்போது மழை குறுக்கிட்ட போதிலும் மழையில் நனைந்து கொண்டே மக்கள் ஊர்வலத்தில் பங்கேற்றிருந்தனர்.

இவ் மேதின ஊர்வலத்தின் போது வட பகுதியில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு, இராணுவம் மற்றும் அரசின் அடக்குமுறை, தொழிலாளர் அடக்குமுறை போன்றவை தொடர்பாக கோசமிட்டுக் கொண்டே ஊர்வலம் நடைபெற்றது.

இம் முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரேயொரு மேதின ஊர்வலம் என்பதனால் இதற்கு பெருமளவிலான பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதனையும் காணமுடிந்தது. (செ-4)

## வட மாகாண குறும்பட தேர்வு

வட மாகாண மட்டத்திலான குறும்பட காட்சியும் சிறந்த குறும்பட தேர்வும் இன்று வியாழக்கிழமை வவுனியாவில் இடம் பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வட மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட குறும்பட போட்டிக்கென கிடைக்கப்பெற்ற குறும்படங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் சிறந்த குறும்படத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.ஸ்ரீதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல கரிச்சந்திர, வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், கலைஞர்கள், குறும்பட தயாரிப்பாளர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட மாகாணத்தை சேர்ந்த குறும்பட தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டுள்ள 36 குறும்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (செ-2,266)

## செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி

(கிளிநொச்சி)

சர்வதேச செஞ்சிலுவை தினம் எதிர்வரும் 8-ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினர் சங்கத்தின் கரைச்சிப் பிரிவின் அனுசரணையுடன் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான மரதன் ஓட்டப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

இப் போட்டியானது காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான திறந்த பிரிவுகள் மற்றும் 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டிகள் ஆனையிறவில் இருந்தும் பெண்களுக்கான போட்டிகள் பரந்தன் சந்தியில் இருந்தும் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலை முன்றலில் முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் தேசிய மட்டத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள போட்டிகளில் பங்குகொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் கடிதங்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணியாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கிளையின் நிறைவேற்று அலுவலர் இராஜஸ்ரீகாந்தன் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தமது பெயர் விபரத்தினை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையில் நேரடியாகவோ அல்லது அலுவலக தொலைபேசி இலக்கமான 0212285843, 0774252840 என்பவற்றினூடாகவோ பதிவு செய்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

## யாழ்.சென்ஜோன்ஸின் ஆண்டு விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 190-வது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை கொண்டாடப்படுவதோடு,தொடர்ந்து 3 நாட்கள் கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் வகுப்பு ரீதியிலான கண்காட்சியும், முத்திரைக் கண்காட்சியும் இன்றும், நாளையும், மறுநாள் சனிக்கிழமையும் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன்.

இக் கண்காட்சிகள் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறவுள்ளதோடு நாளை மறுதினம் பாடசாலை ரீதியான கண்காட்சியுடன் பாடசாலையின் கலை நிகழ்வுகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முத்திரைக் கண்காட்சியை இலங்கை தபால் மா அதிபர் டி.எஸ்.பி.ஆர்.அபேரத்தின பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்துவைப்பார்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி 1823 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)


## சத்திய தரிசனம்




அன்பு என்னும் விதையை பாலைவன இதயங்களில் தூவுங்கள். பின்பு அப்பாலைவனங்கள் அன்பினால் பசுமையாகிவிடும். மலர்ந்து வாசம் கொடுக்கும். அங்கு அன்பு நதிகள் பெருகி ஓடும். அங்கு ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு குழந்தையும் அன்பின் சங்கீதத்தைப் பாடும். மனிதனுக்குத் தொண்டு செய்வதன்மூலமே தனக்குள் இருக்கும் கடவுளை மனிதன் கண்டுகொள்கிறான்.

நான் எப்போதும் புதுமையானவன். எப்போதும் பழமையானவன். நான் தர்மத்தை நிலைநாட்டவும் தூய்மையானவர்களுக்கு உதவவும் பாதை தெரியாத குருடர்களுக்கு சரியான பாதையைக் காட்டவுமே வருவேன். சிலர் கேட்கலாம் பரமாத்மா மனிதனாக வருவாரோ என்று இதற்கு நான் சொல்கிறேன் மனிதன் மனித உருவத்தின் மூலமே மகிழ்ச்சியடைகிறான். அவன் கல்வி, ஆர்வம், தெளிவு இவற்றை மனித மொழிகளின் மூலமே பெறுகிறான்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## சனிதோச நிவாரணத்துக்கு சனிக்கிழமை விரதம்




தீய நிலை வந்தாலும் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு தடை ஏற்பட்டாலும் சனி பிடித்திருக்கின்றது என்று கூறுவதுண்டு. நவீன உலகம் பெரும்பான்மையாக அங்கீகரித்துள்ள சோதிட நூலும் இது சரி என்று கூறுகின்றது. அதன் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களிலாக மனித வாழ்க்கையே பாதிக்கின்ற ஒரு கிரகமாகும் சனி. ஒரு பாவ கிரகமாகக் கருதி வரும் சனி திசையின் காலம் பத்தொன்பது வருடமாம். ஆனால் முப்பது வருடத்துக்கிடையிலும் இருபத்திரெண்டரை ஆண்டுகள் வெவ்வேறு இராசிகளாக பயணம் செய்து இந்தக்கிரகம் மனிதருக்கு துன்பங்கள் அளித்துக் கொண்டிருக்குமாம். மேலும் ஏழரைச்சனி, கண்டகசனி, அஷ்டசனி என்ற சந்தர்ப்பங்களில் பெரும் கஷ்டங்களை மனிதரில் உருவாக்குமாம்.

ஆனாலும் பக்தர்கள் இந்தக்கிரகத்தையும் பிற கிரகங்களைப்போலவே பூஜை செய்வதுண்டு. சனீஸ்வரன் என்று அழைக்கப்படும் கிரகதேவனைத் தவிர்க்கமுடியாது என்பதே நிஜம். ஆனால் இந்தக் கேடுகளின் காலத்தின் நிவாரணத்துக்காக சனிக்கு கறுத்த ஏள், கறுத்த உடை, உழுந்து எண்ணெய் என்பவை அர்ப்பித்து பூஜை செய்வதுண்டு. இந்த நாட்களில் சாஸ்தா கோயில்களிலும் தரிசனம் நடத்துவதுண்டு. பக்தியுடன் தரிசனம் நடத்தி பிரார்த்தனை செய்தால் வாழ்க்கையில் மாறுதல்கள் உண்டாகும் என்று நவீனமாக நூல் கண்டறிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் பற்றி உண்மையில் சிந்திக்கிறீர்களா?

12


பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

அண்மைக்காலங்களில் பெற்றோர் சுயமாகச் சிந்திப்பதை விடவும் ஏனையவர்கள் செய்வதைப் பின்பற்றுவதில் நாட்டம் கொள்கின்றனர்.

பிள்ளைகளை உடனடி வருமானத்திற்காக உடல் வேலைகளுக்கு விடுதல், கிராமியப் பாடசாலைகளிலிருந்து கூட்டம் கூட்டமாக போட்டி போட்டுக் கொண்டு நகர்ப்புற பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நகர்த்துதல் போன்ற பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.

பெற்றோர் இவை தொடர்பாக ஏற்படக்கூடிய மறைந்து கிடக்கும் தீமைகளை உணரமுடியாது திண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் பெற்றோர் தமது பிள்ளைகள் பற்றி சுயமாக, உள்நோக்கிச் சிந்திப்பது அவசியமாகிறது. இவைபற்றியே இங்கு கலந்துரையாடப் படுகின்றது.

படிப்பும் செலவும்

பிள்ளைகள் கவனமாக படிப்பதற்கு நீங்கள் எல்லாவழிகளிலும் உதவுவீர்களானால் உடனடியாக பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டுப் பெறக்கூடிய மதிப்பு மிக்க பட்டம் சுலபமாக கிடைத்து விடுகின்றது.

பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்தால் தகுதிமிக்க ஒரு பட்டத்தைப் பெறுவதற்கு 70 இலட்சம் ரூபா வரை செலவிட வேண்டும் என்று குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம். உங்கள் பிள்ளைகள் திறமையாகப் படிப்பதற்கு நீங்கள் மனம் விரும்பி உதவிகள் செய்தால் ஒரே தடவையில் க.பொ.த சாதாரண தரத்திலும் க.பொ.த உயர்தரத்திலும் சித்தியடையலாம்.

இதில் குறிப்பிடத்தக்க புள்ளிகளைப் பெறும் போது பல்கலைக்கழகங்களில் இலவசமாக மருத்துவராக வருவதற்கான கல்வியையோ பொறியியலாளராக வருவதற்குரிய கல்வியையோ பெறமுடியும்.

நீங்கள் நாளாந்தம் பிள்ளைகள் உழைத்துக்கொண்டு வரக்கூடிய 500 ரூபாவை பெரிதென எண்ணினால் அவன் 70 இலட்சம் ரூபாய் உழைக்க எத்தனை வருடங்கள் தேவைப்படும்? அத்துடன் பிள்ளை வெயிலிலும் மழையிலும் அலைந்து நோயாளியாகும் வாய்ப்புக்களும் உண்டு.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இலவச உயர் கல்வி மூலம் பெறக்கூடிய 70 இலட்சத்தை ஏன் விடவேண்டும்?

நீங்கள் போதிய அக்கறை காட்டாமலும் சரியான உறக்கமளிக்காமலும் இருந்தால் சாதாரண சித்திகளைப் பெறும் போது பணம் செலுத்தியே பட்டம் பெற வேண்டியேற்படும்.

படிப்பது பற்றிய ஆசையை எப்போதும் உங்கள் பிள்ளைகளிடம் ஏற்படுத்தவேண்டும். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் நன்றாகப் படித்து நல்ல நிலையில் உள்ளவர்களைப் பற்றிப்பேசுங்கள்.

ஒப்பிட்டு உங்கள் பிள்ளைகளைக் குறைகூறக்கூடாது.


கல்வித் தரிசனம்

ஆனால் தன்னம்பிக்கை வரும் வகையில் அடிக்கடி கற்பதில் நாட்டம் ஏற்படும் வகையில் இதமாகப் பேசுங்கள்; கலந்துரையாடுங்கள்.

உங்கள் பிள்ளைகளை ஊக்குவித்து உதவிகள் பலவும் வழங்கி வழிகாட்டக் கூடியவர்களுடன் தொடர்புகளை உருவாக்கிப் பாருங்கள். பின்வரும் நன்மைகள் கிடைக்கும்.

சிறந்த கற்கை நெறியில் படிக்கலாம்

தரமான பல்கலைக்கழகத்தில் படிக்கலாம்

ப்சிலசமயம் 30-40 இலட்சம் பெறுமதியான புலமைப்பரிசில் கிடைக்கலாம்.

நல்ல ஒழுங்கான படிப்பு வாழ்க்கையை அவர்கள் உருவாக்குவர்

தீய நண்பர்களிடமிருந்தும் தீய பழக்கங்களிடமிருந்தும் இயல்பாகவே விலகி வாழ்வார்.

வாழ்வில் முன்னேறக் கூடியவர்களது தொடர்புகளும் சுலபமாகக் கிடைக்கும்.

வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுக்கும் செல்லமுடியும்.

வெளிநாட்டில் அதிக சம்பளத்தில் சிறந்த வேலை வாய்ப்பையும் பெறமுடியும்.

சுலபமாகச் செல்வந்த நாட்டில் குடியுரிமை பெறவும் முடியும்.

மரியாதையான குடும்பங்களில் திறமையும் பண்பாடும் மிக்க பிள்ளைகளை எதிர்காலத்தில் அவர்கள் திருமணம் செய்யவும் வாய்ப்பு ஏற்படும்.

இத்தகைய பலாபலன்கள் பெரிய பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்காக அலைகிறீர்கள். அதிக பணத்தைப் பாடசாலைகளுக்கு நன்கொடையாகக் கொடுப்பதற்கு அதிக முயற்சி எடுக்கிறீர்கள்.

இதில் ஒரு அபாயமும் உண்டு. கிராமங்களில் இயல்பான உணர்வுகளுடன் சுய சந்தோசங்களுடன் சகபாடிகளிடம் நல்ல அங்கீகாரத் துடன் வாழ்ந்து இத்தகைய மாணவர்களை நகரின் பெரிய பாடசாலைக்கு மாற்றிவிடுவதால் என்ன நிகழ்கிறது? ஆழமாக யோசிப்பதுண்டா?

பின்வரும் உள் மறைந்திருக்கும் அபாயங்கள் பிள்ளைகள் மன அழுத்தங்களுக்கு உட்படலாம்.

✷நகரப்பாடசாலைகளிலிருந்து வீடுவரும் வழியிலோ பஸ்ஸுக்காக காத்திருக் கும்போதோ பொருத்தக் கேடானவர்களுடன் பழக வேண்டியேற்பட லாம்.

குறிப்பாக கட்டிளமைப் பருவத்துப் பெண் பிள்ளைகளுக்கு இத்தகைய அபாய

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும் தொடர்ந்து வருவதாகவும் அமையும்.

நீங்கள் ஆற அமர இருந்து உங்கள் பிள்ளைகள் பற்றியும் இத்தகைய நன்மைகள் பற்றியும் எப்போதாவது சிந்தித்ததுண்டா? உங்கள் மனச்சாட்சியின்படி பதில் சொல்லுங்கள்.

படித்த பெற்றோரும் சரி சாதாரண பெற்றோரும் சரி இவ்வாறு தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலை பற்றி ஆழமாக அடிக்கடி சிந்திப்பதுண்டா?

பரீட்சைக்காலங்களில் வினாத்தாள் பற்றி அல்லது பெறுபேறு பற்றி சிலசமயம் ஏனைய பெற்றோருடன் நீங்கள் பேசியிருக்கலாம். அது பரீட்சையில் ஏனையவர்களைவிட உங்கள் பிள்ளைகள் முந்திவி டவேண்டும் என்ற போட்டியுணர்வு கார ணமாக இருக்கலாம்.

இதிலிருந்து வெளியே வாருங்கள். உங்கள் பிள்ளையின் முன்னேற்றம் பற்றி ஆழ்மன உணர்வு களுடன் ஒன்றித்துச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் மனதில் புதிய காட்சிகயைப் பெறுவீர்கள்.

பள்ளிகளில் சேர்த்தல்

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைவதுடன்

காணப்படுகின்றன

✷ அதிகதூரம் போக்குவரத்து செய்வதால் உடல் களைப்பும் பணச் செலவும் ஏற்படும்.

✷தனியே பயணம் செய்வதால் தகவல்களை அறிவதற்காக கைத்தொலைபேசியை கொள்வனவு செய்து கொடுப்பீர்கள். புதிய தொந்தரவுகள் அதிலிருந்து தொடங்கிவிடும்.

✷நகரில் மாணவர்களின் நடை உடைகளில் நவீனத்துவம் தெரியும். புதிதாக சேர்ந்த கிராமிய மாணவர்கள் உடனடியாக மாறமுடியாதபோது ஏளனம் செய்யப்படுகின்றனர். இதனால் ஒதுக்கப்படுகின்றனர். தாழ்வுணர்ச்சி வளர்கின்றது. மன அழுத்தம் ஏற்படுகிறது. இயல்பாக படிப்பில் நாட்டம் குறைந்து விடுகிறது.

✷ புதிதாகச் சேர்ந்த பெரிய பாடசாலைகளின் புறக்கிருத்தியங்களுக்கென மேலதிகமான பணத்தைத் தொடர்ச்சியாக பெற்றோர் செலவிட வேண்டியேற்படுகிறது.

✷ சில பெரியபாடசாலை களில் மாணவத் தலைவன், மன்றத்தலை வன் போன்ற பதவிக்ளை சிறுவயதிலி ருந்தே அங்கு படித்தவர்க ளுக்கு மரபு கள் இருக்க லாம். அத் தகைய நிலைமை களில் உங்கள் ங்கள் ஏற்படமுடியும்.

✷நீண்டநேரம் வெளியில் இருப்பதால், அலைவதால் வீடுதிரும்பும்போது களைத்துப்போய் விடுவர். இதனால் தினமும் சுயமாகப் படிக்கும் பழக்கம் இல்லாமலே போய்விடும்.

பெற்றோர்களே தயவு செய்து உங்கள் பிள்ளைகளை இயன்றளவு உங்கள் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் படிக்க விடுங்கள்.

அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் போதியளவு வழங்குங்கள்.

தேவைப்படின் அந்தப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் போதியளவு உதவிகள் ஆதரவுகளையும் வழங்குங்கள்.

நகரங்களை நோக்கி அநாவசியமாக உங்கள் பிள்ளைகளை நகர்த்திக் கொண்டிராதீர்கள். உங்கள் பிரதேசத்துப் பாடசாலைகள் பிள்ளைகள் இல்லாமல் மூடப்பட்டால் உங்கள் பிரதேசம் செழிப்படைய முடியுமா?

வரலாற்றுக் காலத்தில் கிராமங்களின் பாடசாலைகள் எத்தகைய சாதனையாளர்களை உருவாக்கியுள்ளது.

தயவுசெய்து அக்கரைகள் பச்யில்லை என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மும்பையை வீழ்த்தி சன்ரைசர்ஸ் அபார வெற்றி




மும்பை அணிக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

6வது இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் ஐதராபாத்தில் நடந்த நேற்றைய முதலாவது போட்டியில் ஐதாராபாத் -மும்பை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

அதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாக டெண்டுல்கரும், ஸ்மித்தும் களம் இறங்கி நிதான மாக விளையாடினர்.

இஷாந்த் சர்மா வீசிய பந்தில் டெண்டுல்கர் 14 ஓட்டங்கள் அடித்திருந்தபோது ஆட்டமிழுந்தார். அடுத்து வந்த கார்த்திக் ஓட்டமேதும் எடுக்காமல் அரங்கு திரும்பினார்.

அடுத்ததாக வந்த ரோகித் சர்மா (22 ஓட்டங்கள்) நிதானமாக விளையாடிய போதிலும், மிஸ்ரா வீசிய பந்தில் இஷாந்த் சர்மாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன் பின் வந்த பொல்லார்ட், ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார்.அதிரடியாக விளையாடிய ஸ்மித் 38 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

பின்னர் களமிறங்கிய ராய்டு அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

20 ஓவர்கள் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்கள் சேர்த்தது.

ராய்டு 34 ஓட்டங்களுடனும், பொல்லார்ட் 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

130 ஓட்டங்கள் என்ற எளிதான வெற்றி இலக்குடன் ஐதாராபாத் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக அக்சாத் ரெட்டியும் ஷிகார் தவானும் விளையாடினார்கள். தொடக்கம் முதலே அந்த அணி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ரெட்டி 7 ஓட்டங்களில் ஜோன்சன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் தவானுடன் ஜோடி சேர்ந்த சங்கக்கார மும்பை அணியின் பந்தைப் பதம் பார்த்தனர்.

சங்கக்கார 21 ஓட்டங்களில் ஹர்பஜன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த விஹாரி தவானுடன் ஜோடி சேர்ந்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதனால் ஐதராபாத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸை வீழ்த்தியது.

அந்த அணியின் அதிகபட்சமாக ஷிகார் தவான் 73 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.


சிறப்பாக பந்து வீசி 2 விக்கெட்டுகளை வீழ்த்திய இஷாந்த் சர்மா போட்டியின் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

### இன்றைய போட்டிகள்

சென்னை எதிர் பஞ்சாப்
மாலை 4 மணி

புனே எதிர் பெங்களூர்
இரவு 8 மணி

# வோர்னரின் அதிரடியில் டில்லி அபார வெற்றி



கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் வோர்னரின் அதிரடியில் டில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐபிஎல் போட்டியின் நேற்றைய 2ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி -கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 136 ஓட்டங்களை எடுத்தது.

137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டில்லி அணி வோர்னரின் அதிரடியான ஆட்டம் மூலம் 17.5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு தனது வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் வோர்னர் 41 பந்தில் 3 சிக்ஸர்கள், 5பவுண்டரிகள் உட்பட 62 ஓட்டத்தினை குவித்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக டில்லி அணியின் வோர்னர் தெரிவானார்.

# கஜேந்திரகுமாரின் வீட்டில் மர்ம நபர்கள் அச்சுறுத்தல்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டிற்குள் நேற்று மாலை 4 மணியளவில் நுழைந்த முகமூடியணிந்த மர்ம நபர்கள் நால்வர் கஜேந்திரகுமார் எங்கே? எனக் கேட்டு அவரது உதவியாளரை அச்சுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நெல்லியடியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் மே தின நிகழ்வுகள் இடம்பெற்றிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர்கள் இருவரும் மழைக்கவசம் மற்றும் முகமூடி அணிந்திருந்ததாகவும் அவர்கள் இருவரும் தங்களது வாகனங்களை வீதியில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் நடந்துவந்து அங்கிருந்த உதவியாளரிடம் கஜேந்திரகுமார் எங்கே என அதட்டல் தொனியில் கேட்டுள்ளனர்.

அதற்கு அவர் நெல்லியடிக்குச் சென்றுள்ளதாக அவரது உதவியாளர் கூறியிருக்கின்றார்.

இதனையடுத்து குறித்த மர்ப நபர்கள் வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை புகைப்படம் எடுத்துக் கொண்டு வெளியேறியிருக்கின்றனர்.

ஏற்கெனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டம் நடைபெறவிருந்த நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டிற்கு முன்னால் அச்சுறுத்தும் பாணியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன .

இந்நிலையில் நேற்று இரண்டாவ து சம்பவம் மீண்டும் அச்சுறுத்தும் பாணியிலும் கட்சியின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலும் இடம்பெற்றிருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியிருக் கிறார்.

மேலும் இந்த விடயத்தில் தாம் அக்கறையுடன் இருப்பதாகவும் எந்த அச்சுறுத்தல்களுக்கும் பின்வாங்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார். (செ-11)

# பொதுநலவாய மாநாட்டை...

இலங்கை அரசாங்கத்தால் கடும் அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்த அறிக்கையில் அதன் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பொலி ட்ரஸ்கொட் தெரிவித்திருந்தார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளை மேம்படுத்துமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் இவ்வறிக்கையில் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுக்கு மனிதவுரிமை செயற்பாட்டாளர்களால் அதிகளவு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இம் மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பது தொடர்பில் இதுவரை எவ்வித முடிபுகளும் எடுக்கப் பட வில்லை என அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளதாக இன்டிபெ ன்டன்ட் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலும், பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு அந்நாடு தலைமை தாங்கவுள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் யஸ்மின் சூகா அதிர்ச்சி வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இலங்கை அரச இயந்திரத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி மற்றும் சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் பல ஆதாரங்களை வெளியிட்டுள்ளன.

இப் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், நம்பகமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் பல ஆதாரங்களை வெளியிட்டுள்ளன.

இப் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், நம்பகமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் மற்றும் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற மேற்கத்தேய நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை மனிதவுரிமை விவகாரங்களின் மேம்பாடு காணப்படாது விட்டால் பொதுநலவாய அரசியல்தலைவர்களின்உச்சி மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாக கனேடியப் பிரதமர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார்.

அத்துடன், இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளைச் சுட்டிக்காட்டி இந்த மாநாட்டில் பிரித்தானிய மகாராணி கலந்து கொள்ளக் கூடாது என மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளூரிலும் சர்வதேசத்திலும் கடும் விமர்சனங் கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் கருத்துச் சுதந்திரம், நீதித்துறை மீதான அச்சுறுத்தல் மற்றும் தலையீடுகள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தும் முடிவில் எவ்வித மாற்றமுமில்லை என பொதுநலவாய செயலகம் அறிவித்திருந்தமை தெரிந்ததே. (செ-11)

# போர் வெற்றி...

இலங்கையில் வெற்றி நாள் அணி வகுப்பு மற்றும் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

நான்காவது ஆண்டாக வரும் மே 19ம் திகதி நடத்தப்படவுள்ள இந்த வெற்றி நாள் கொண்டாட்டத்திற்கு இப்போதே கொழும்பு தயாராகத் தொடங்கியுள்ளது.

வெற்றிநாள் அணி வகுப்பின் ஒத்திகை நேற்று தொடக்கம் காலிமுகத்திடலில் இடம் பெற்று வருகின்றது.

இதற்காக நேற்று முன்தினம் காலை 9.30 மணி தொடக்கம் 11 மணிவரை காலி முகத்திடல் சுற்று வட்டத்தில் இருந்து பழைய நாடாளுமன்றக் கட்டிடம் வரையிலான வீதி மூடப்பட்டிருந்தது.

இந்த வெற்றி நாள் கொண்டாட்டத்தினை அரசாங்கம் ஒரு தேசிய நாளாக பிரகடனம் செய்து கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# உளறல்...

யுள்ளார் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தற்போது மேடைகளில் ஏறி நாட்டில் தற்போது தலைவர் இல்லை நாடு அழிவை நோக்கி சென்றுள்ளது.நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்.

11 வருடங்கள் ஆட்சியில் இருந்து செய்ய முடியாததை செய்யப் போவதாக இன்று பேசுகிறார். இது நித்திரையில் இருந்து எழுந்தது போன்ற வேலையாகும்.

அண்மையில் மத்துகம பிரதேசத்தில் அடிக்கல் நாட்டும் விழா ஒன்றுக்கு வந்தார்.

அர்ஜூன போன்ற மூழ்கும் கப்பலுடன் அவர் அங்கு வந்திருந்தார் எனவும் அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயம் தோல்வி...

தலைவர்களின் உச்சி மாகாநாட்டை பகிஷ்கரிக்கும்முடிபுக்கு அப்பால்கனடா எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன வென அவர் எதுவும் கூறவில்லை.

இந்நிலையில் பொதுநலவாய அமைப்பில் இருந்து கனடாவிலகுமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இப்போது இல்லை என அவர் பதிலளித்துள்ளார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் கனடா பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளுக்கு அழுத்தங்களைக் கொடுத்ததாகவும் ஜோன் பயார்ட் கூறியுள்ளார். ஆயினும் அம்முயற்சி வெற்றிபெறாமல் போனமைக்கான காரணம் தொடர்பில் கருத்து எதனையும் தெரிவிக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகுவது குறித்து கனேடிய அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என அந்நாட்டு தேசிய ஜனநாயக் கட்சியின் வெளிவிவகாரக் குழுவின் உறுப்பினர்போல் டேவர்தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்புக்கு வருடம் தோறும் 25 மில்லியன் டொலர்நிதியை வழங்கிவரும் கனடா அவ்வமைப்புக்கு நிதி வழங்கும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய தலைவர்களின் உச்சிமாநாட்டை இவ்வாண்டு இலங்கையில்நடத்துவதுஎனஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிபில் எவ்வித மாற்றமும் இல்லை என அவ்வமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மாகடந்தவாரம் அறிவித்திருந்தார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட ஜோன் பயார்ட் பொதுநலவாய அமைப்பு என்பது அடிப்படையில் சட்டத்தின் மாட்சிமை ஜனநாயக மற்றும் நல்லாட்சி போன்ற விழுமியங்கள் சார்ந்த ஒரு கட்டமைப்பு என்றும் இந்த விழுமியங்கள் அனைத்திலும் இலங்கை அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாக சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கையில் இடம்பெறும் இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் வலுவான ஆதாரங்கள் கிடைத்து வரும் நிலையில் பொதுநலவாய செயலகத்தின் முடிபு மிகுந்த அதிர்ச்சியை யும், கவலையையும் ஏற்படுத்துவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## தேவை

கொழும்பிலுள்ள வீட்டிற்கு
வீட்டுப் பணிப்பெண்
(சமையல் தெரிந்த)
தேவையாகவுள்ளது.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல.
0777 750 391

(சி-3169)


# 'இலங்கை மீது...

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தங்களைக் கொடுக்கும் வகையில் இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இரு தரப்பு ரீதியில் இணைந்து தொடர்ந்து பணியாற்றவுள்ளோம்.

இலங்கை நிலைமைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலை கொண்டுள்ள ஏனைய நாடுகளுடன் இணைந்து வெளிப்படையான முறையில் தொடர்ந்தும் நாம் பணியாற்றி வருகிறோம்.

இது தொடர்பில் சர்வதேச சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து நிறையப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை விவகாரம் உள்ள நிலையில், எமது கரிசனைகளை நேரடியாக நாம் தொடர்ந்து வெளிப்படுத்துவோம் என பற்றிக் வென்ரெல் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பி.பி.சி. தமிழோசையில் ஒலிபரப்பப்பட்ட ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான நிகழ்ச்சிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அரசியல் கேலிச்சித்திர ஓவியர் ஒருவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்ட ,கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற் கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் தமக்கான கடப்பாடுகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுக் கொள்கிறது.

இது கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித வுரிமைகள் ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தின்படி நிறைவேற்ற வேண்டிய தேவை மட்டுமல்ல. இது இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் மனிதவுரிமைகள் தொடர்பிலான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கவலைகள், சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே கூறியமை போன்று இலங்கையில் கருத்துச் சுதந்திரத்திற்கு உள்ள அச்சுறுத்தல் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம்.

அத்துடன் இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் மனித வுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கு தேவையான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளது என்று தெரிவித்துள்ளார். (செ-11)


## மணல் மண் விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் உகந்த உப்புத் தன்மையற்ற மணல் மண் விற்பனைக்குண்டு. உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தருகின்றோம்.

தொடர்புக்கு:
ஜீவா 071 368 4639

(C-3166)

## நியூ நெல்சன் லேணர்ஸ் நடத்தும்

மாகாண பொது சேவைக்கு சாரதி சேவையின்
III வகுப்பு பதவிக்கான ஆட்சேர்ப்பு
செய்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

- இடம் :- கலைத்தூது கலையகம் 285, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- காலம்:-03.05.2013(வெள்ளிக்கிழமை)
- நேரம்:-மாலை 1.00 முதல் 5.00 மணிவரை
- போக்குவரத்து விதிமுறைகள்

20 வருடகாலமாக மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளராக கடமையாற்றிய திரு.வ.பத்மநாதன்
மற்றும்

- பொது அறிவு வளவாளர் -திரு.த.தவசேகர்

NEW NELSON LEARNERS D.S.590

### பதிவு செய்யும் இடங்கள்

நியூ நெல்சன் லேணர்ஸ்

- கண்டி வீதி ,யாழ்ப்பாணம் - 0212224527
- பருத்தித்துறை வீதி,நெல்லியடி - 0214923115
- வல்வெட்டித்துறை - 0214923733
- சுன்னாகம் - 0214923732
- சாவகச்சேரி - 0214923114

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

## SUMANS ENTERPRISE

இல.291, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

- நவீன வகையான Wall Tiles, Floor Tiles, Bathroom Tiles, Commode Sets Plastic, Glass Doors, Mirror Sets.
- PVC Pipes & Fitting நீர்த்தாங்கிகள் Pet.Arpico 350L, 500L, 750L, 1000L, 1500L, 2000L, 5000L, 10000L, மேற்படி அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
- தரமான கல்சியம் நீக்கி Air Freshner, Glass Cleaner, Toilet Cleaner, Floor Mopper, Dish Washer என்பவற்றை மொத்த கொள்ளளவில் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் வீட்டின் TileElectrical மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் வேலைகள் எம்மால் பொறுப்பேற்று மிகச் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

Sumansenterprise@gmail.com
தொடர்பு: 021 510 0790

(c-3148)

## மீண்டும் ஒரு புதிய பிரிவு

DCM
A/L 2015
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
04.05.2013 காலை 8 மணி
DCM

(சி-3176)

## சங்கம் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்

இடம்:- பிரதேச சபை மண்டபம் (கரைச்சி)
காலம்:- 03.05.2013
நேரம்:- மு.பகல் 10.மணி(வெள்ளிக்கிழமை)

மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளதனால் பதிவினை மேற்கொண்ட அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி
- நிர்வாகம்

கிளி/மாவட்ட வாடகை முச்சக்கர வண்டி
உரிமையாளர்கள் கூட்டுறவுச்சங்கம்

(C-3146)

## மானிப்பாய் ஆனைக்கோட்டை
## + கஜமுகன் வைத்திய நிலையம் +

[ மீண்டும் ஆனைக்கோட்டை (கூழாவடி)
வைத்திய கலாநிதி சி.சிவானந்தராஜா ]

எமது சேவைகள்

- சகல விதமான நோய்களிற்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- குழந்தைகளிற்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- இரத்தம், சிறுநீர் (ஆய்வு கூட சேவைகள்) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
- விடுமுறையில் செல்பவர்களிற்கான வைத்தியரின் சான்றிதழ் வழங்கப்படும்.

(5206)

### தினமும் பார்வையிடும் நேரங்கள்

[ காலை 08.30 மணிமுதல் - 01.00 மணிவரை
மாலை 04.30 மணிமுதல் - 08.30 மணிவரை ]

04 ஆம் கட்டை,
புக்கை தின்னிப் பிள்ளையார் கோவிலடி,
யாழ்.றோட், ஆனைக்கோட்டை.

வைத்திய கலாநிதி
சி.சிவானந்தராஜா
M.B.B.S. (SL)

(சி-3168)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af

பிரெஞ்! French! பிரெஞ்! French!

பிரான்ஸ், கனடா முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். Paris இல் உள்ள எமது தலைமை நிறுவனத்திலும் France இன் வேறு எந்த இடத்திலும் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "Alliance Francaise" மட்டுமே.

இது ஓர் அரிய சந்தர்ப்பம்.உடன் பதிவு செய்யுங்கள்.

புதிய வகுப்புக்கான அனுமதிகள் 04.05.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

61, Kachchery-Nallur Road, Jaffna. T.P. 021 222 8093 (2487)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org